40. பேராசைப் படாதிருப்பீராக.

41. யாசிப்போரை விரட்டாதீர்,

42. விருந்தினரை உள்ளன்புடன் உபசரிப்பீராக.

43. கஷ்டம் வந்த பின் பொறுமை கொள்வீராக.

44. நன்மைகளை ஏவவும், தீமைகளைத் தடுக்கவும் செய்வீராக.

45. நன்மை புரிவதின் பக்கம் பிறரைத் தூண்டுவீராக.

46 உமது குற்றங் குறைகளை நினைத்து வருந்துவீராக.

47. உமக்குத் தீங்கு செய்தோருக்கும் நன்மையே செய்வீராக.

48. உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவீராக.

49. அதிகமாக நித்திரை செய்யாதீர் அதனால் இதயம் மரித்து விடுவதோடு கை சேதமும் உண்டாகும்.

50. அனுதினமும் 100 முறை பாவமன்னிப்புத் தேடிக் கொள்வீராக.

(வஸிய்யத்துன்னபீ, லிசைய்யிதினா அலீ)

செல்வத்தைக்காண கல்வி சிறந்ததேன்?

1. கல்வி நபிமார்களிடமிருந்து பெற்ற வாரிசு சொத்தாகும். செல்வம் பணக்காரர்களிடமிருந்து பெற்ற வாரிசு சொத்தாகும்.

2. கல்வி செலவு செய்வதால் குறையாது, செல்வம் செலவு செய்வதால் குறைந்து விடும்.

3. கல்வி கல்விமானைப் பாதுகாக்கும். ஆனால் செல்வம் அதைப் பாதுகாப்பதின் பக்கம் தேவைப்படும்.

4. கல்வி கலைஞர்களுடன் கப்ரினுள் செல்லும் ஆனால் செல்வம் செல்வந்தர் மரணமானபின் உலகிலேயே தங்கிவிடும்.

5. தெய்வீகக் கல்வி விஸ்வாசிகளுக்குத்தான் கிடைக்கும். ஆனால் செல்வம் விஸ்வாசிகளுக்கும் நிராகரிப்போருக்கும் கிடைக்கும்.

6. கலைஞர்களிடம் எல்லா மக்களும் தேவையாவார்கள் ஆனால் செல்வந்தர்களிடம் அவசியமுள்ளவர்கள் மட்டும் தேவைப்படுவார்கள்.

7. கல்வி சிருத்துல் முஸ்தக்கீம் பாலத்தில் நடந்து செல்ல கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும். ஆனால் செல்வம் அதில் நடந்து செல்ல செல்வந்தர்களுக்குத் தடையாக இருக்கும். (ரவ்னகுல்மஜாலிஸ்)

சொர்க்கத்தின் தலைவாசலிலே

மறுமையில் சொர்க்கத்தின் வாசலுக்கருகில் நான்கு வகையினர் எவ்விதக் கேள்வி கணக்கும் தண்டனையுமில்லாமல் கொண்டுவரப்படுவார்கள். 1. ஹஜ்ஜைமுறித்து விடத்தக்க காரியங்களன்றி பூரணமாக ஹஜ்ஜை நிறைவேற்றிய ஹாஜி, 2 கற்றபடி நடந்தொழுகிய ஆலிம், 3. ஜிஹாத் அறப்போரிலே உயிர் நீத்த ஷஹீத் (வீரதியாகி) 4. ஹலாலான முறையில் பொருளைச் சம்பாதித்து, அதை எவ்வித முகஸ்துதியுமின்றி அல்லாஹ்வின் பாதையிலே செலவு செய்த கொடையாளி இந்நால்வரும் முதலில் தாமே சொர்க்கத்தில் புகுத வேண்டுமென்று விரும்பி

தர்க்கித்துக் கொள்வார்கள், அப்போது இறைவன் அவர் களுககு மத்தியில் தீர்ப்பளிப்பதற்காக ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்களை அனுப்பி வைப்பான்.

அதன்படி ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அந்த நால்வர்களிடமும் வந்து முதலில் ஷஹீதிடம் நீர் முதன் முதலில சொர்க்கத்தில் புகுத விரும்புகிறீரே, அப்படி என்ன நல்ல அமல் செய்தீர்? என்று கேட்பார்கள். அதற கவர் நான் இறைவனின் பொருத்தத்தையும், திருப்தியை யும் நாடி போர்க்களம் சென்று எதிரிகளுடன் போர் புரிந்து இறைவனுக்காக என் உயிரையே தியாகம் செய்தேன் என் றுரைப்பார். அப்போது ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஷஹீதுகளுரிய பலாபலன்களையும், சிறப்பையும நீர் எவ் வாறு அறிந்தீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் ஆலிம் களிடம கேட்டுத தெரிந்து கொண்டேன் என்பார். அப்படி யானால், ஆலிமாகிறவர் உனக்கு உஸ்தாதாகி விட்டார். ஆதலால் . உனது உஸ்தாது (ஆசிரியருக்) கு முந்துவது ஒழுக்கமல்ல, மரியாதையுமல்ல. மரியாதையைப் பேணி ஒதுங்கி நில் என்று ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறுவார்கள்.

பின்பு ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஹாஜியை நோக்கி நீர் முதலில் சொர்க்கத்தில் நுழையப் பிரியப்படு கிறீரே! அப்படி என்ன நற்கிரியை புரிந்தீர் என்று கேட் பார்கள். அதற்கவர் நான் அல்லாஹ்வின் உத்தரவுப்படி பொருள் நஷ்டத்தையும், உடல் கஷ்டத்தையும் பொருட் படுத்தாமல் க.:பத்துல்லாஹ் சென்று ஹஜ்ஜு கடமையை

நிறைவேற்றினேன் என்பார். அப்போது ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஹஜ்ஜு செய்வது கடமை என்பதையும் அதற்குரிய நன்மைகளையும் எவ்வாறு அறிந்து கொண்டீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் நான் ஆலிம்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன என்பார். அப்போது ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அப்படியானால் ஆலிமாகிறவர் உனக்கு ஆசானாகி விட்டார். ஆதலால் உனது ஆசானுக்கு முந்துவது ஒழுங்குமல்ல. மரியாதையுமல்ல. எனவே மரியாதையைப் பேணி ஒதுங்கி நில் என்று கூறுவார்கள்.

பின்பு ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள், கொடையாளியை நோக்கி நீர் முதலில் சொர்க்கத்தில் புகுத நாடுகிறீரே! அப்படி என்ன நற்கிரியை புரிந்தீர்? என்று கேட்பார்கள். அதற்கவர் நான் தகுமான முறையில் பொருளைச் சம்பாதித்து அதை அல்லாஹ்வின் பாதையிலே அவனின் திருப்தியை நாடி அவனுக்கு பொருத்தமான அவனின் வழியிலேயே செலவு செய்தேன் என்றுரைப்பார். அதற்கு ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அவ்வாறு செலவு செய்வதின் நன்மைகளை யாரிடம் அறிந்தீர்? என்று கேட்பார்கள். அப்போது அவர் ஆலிம்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்பார். அப்பொழுது ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அப்படியானால் ஆலிமாகிறவர் உனக்கு ஆசானாகி விட்டார் ஆசானுக்கு முந்துவது மரியாதையல்ல ஆதலால் மரியாதையைப் பேணி ஒதுங்கி நில் என்றுரைப்பார்கள்.

இங்ஙிகழ்ச்சிகளைக் கண்ணுற்றுக் கொண்டிருந்த

ஆலிமாகிறவர், இறைவா! நான் கொடையாளியின் தர்மத்தாலும், உபகாரத்தாலுமே உனது தீனுடைய கல்வியைக் கற்று ஆலிமானேன், ஆதலால் கொடையாளி முதலில் சொர்க்கத்தில் நுழைய அனுமதியளிப்பாயாக என்று (ஷபாஅத்) மன்றுடுவார்கள். அப்போது இறைவன் ஏ! ரிஸ்வானே! ஆலிமாகிறவர் உண்மையே சொல்கிருர். ஆதலால் சொர்க்கத்தின் வாயிலைத் திறந்து முதலில் கொடையாளியை அதில் நுழையச் செய்வீராக! என்று உத்திரவிடுவான். அதன்படி முதலில் கொடையாளியும் மற்றவர்கள் அவருக்குப்பின்னும் சொர்க்கத்தில் புகுதுவார்கள். மறுமையில் நபிமார்கள் அதற்கடுத்தபடி உலமாக்கள், அதன் பின் ஷுஹதாக்கள் ஆகிய மூவர்க்கத்தினரும் அவர்கள் நாடியவர்களுக்கு இறைவனிடம் "ஷபாஅத்" செய்வார்கள் என்று பெருமானுர் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். இந்த ஹதீதின்படி உலமாக்களுடைய ஷபாஅத்தால் கொடையாளி முதலில் சொர்க்கத்தில் புகுதுவார் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா? (துர்ரதுல்வாயிளீன்)

கண்ணியப்படுத்துங்கள்

உலமாக்களை கண்ணியப்படுத்துங்கள். ஏனெனில் அவர்கள் நபிமார்களின் வாரிசுக்காரர்களாக இருக்கிருர்கள். எனவே எவர்கள் உலமாக்களைக் கண்ணியப்படுத்துகிருர்களோ. அவர்கள் உண்மையில் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவர்களாவர்கள். எவர் ஒரு ஆலிமை கண்ணியப்படுத்துகிருரோ அவர் உண்மையில் எழுபது நபிமார்களை கண்ணியப்படுத்தியவரைப் போலாவார்.

எவர் மார்க்கக் கலை பயிலும் ஒரு மாணவரைக் கண்ணியப் படுத்துகிறாரோ அவர் எழுபது வீர தியாகிகளைக் கண்ணியப்படுத்தியவரைப் போலாவார். எவர் மார்க்கக் கல்வியையும், கல்விமான்களையும் நேசிக்கிறாரோ அவருடைய ஜீவிய காலத்திலேற்படும் சிறு பாவங்கள் பட்டோலையில் எழுதப் பட மாட்டாது. ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் நீங்கள் உலமாக்களைக் கண்ணியப்படுத்துங்கள். ஏனெனில் அவர்கள் இறைவனிடம் கண்ணியவான்களாக இருக்கிறார்கள். எவர் உலமாக்களைக் கண்ணியப்படுத்துகிறாரோ அவர் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவராவார். எவர் அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்துகிறாரோ அவரின் இருப்பிடம் சுவனமாகும். (ஹதீஸ்) உலமாக்கள் இல்லாவிடில் மக்களெல்லாம் மாக்களாகி விடுவார்கள். ஆனால் உலமாக்கள் மக்களை மாக்கள் தன்மையை விட்டும் மனிதத் தன்மைக்குக் கொண்டு வருகிறார்கள் (ஹதீஸ்). எனவே உலமாக்களைக் கண்ணியப்படுத்துவதும் அவர்களின் சொற்களுக்கு செவி மடுப்பதும் அவசியமாக இருக்கிறது என்பதை மேற்குறித்த வசனங்கள் தெளிவாக்குகிறதல்லவா ?

(துர்ரதுல் வாயிளீன்)

மனிதனைப் புனிதனாக்கும் மாபெரும் பனிரெண்டு விஷயங்கள்

ஹஜ்ரத் கஃபுல் அஹ்பார் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் அதாவது :- நான் தவ்ருத், ஜபூர், இன்ஜீல, தூர்ஆன் ஷரீப் ஆகிய நான்கு வான்மறைகளையும் கற்றுணர்ந்திருக்கிறேன் ஆயினும் அவைகளிலிருந்து பனிரெண்டு விஷயங்களையே

சொருக்கி எடுத்து அவைகளை ஒரு காகிதத்தில் எழுதி என் கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு அனுதினமும் அவ்விஷயங்களைக் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் மும்முறை நோட்டமிட்டு என்னைத் திருத்திக் கொள்வேன் அவைகள் :-

1. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! எனது பொக்கிஷம் நிறைந்திருக்கும் வரை உனக்குரிய உணவு கிடைக்காமல் தப்பிவிடும் என்று பயப்படாதே. நிட்சயமாக எனது பொக்கிஷம் ஒரு போதும் குறையவே குறையாது.

2. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! உனது தகுதி (நன்மை) க்குத் தக்கவாறு உன்னை நான் நேசிக்கிறேன். எனது தகுதிக்குத் தக்கவாறு நீ என்னை நேசி.

3. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! நீ சிருத்துல் முஸ்தக்கீம் பாலத்தைக் கடந்து சென்று உனது இரு பாதங்களையும் சொர்க்கத்தில் காணும் வரை எனது சூழ்ச்சியைப் பற்றி நிம்மதியாக இருந்திடாதே.

4. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! உலகிலுள்ள சகல சிருஷ்டிகளையும் உனது பிரயோஜனத்திற்காகவே படைத்திருக்கிறேன். ஆனால் என்னை வணங்கவே உன்னை படைத்திருக்கிறேன்..

5. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! எனதுதிறமையும் வல்லமையும் நிறந்தரமாக இருக்கும்கால

மெல்லாம் என்னைத் தவிர்த்து வேறு எவருக்கும் நீ பயப்படாதே.

6. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! உனது தவறினாலும், குற்றத்தினாலும் ஏற்படும் தீமைக்காக நீ என் மீது கோபமும் வெறுப்பும் கொள்ளாதே. நீ எனக்கு மாறு செய்த குற்றத்தினாலும், தவறினாலுமே அத்தீமைகள் நிகழ்ந்தனவென்று உணர்ந்து உன்னையே நீ கோபித்துக் கொள்.

7. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! அர்ஷுக்கு அப்பாலிருந்து, பாதாளம்வரையிலுமுள்ள அனைவரும் என்னையே நாடுகிறார்கள். ஆனால் நான் உன்னை நாடுகிறேன். எனினும் நீ என்னை விட்டும் உனது துராச்சாரத்தால் வெகுதூரம் வெருண்டோடுகின்றாய்.

8. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! நீ என்னைத்தவிர எப்பொருளையும் நேசிக்காதே. ஏனெனில் அவைகள் உனக்கு தக்க சந்தர்ப்பத்தில் பயன் தராது. என்னை நீ எப்பொழுது நாடுகிறாயோ அப்பொழுதே எனது உதவியைப் பெற்றுக்கொள்வாய்.

9. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! நாளைய தினத்தின் உணவை இன்றே நீ என்னிடம் கேட்காதே. ஏனெனில் நாளைய தினத்தின் அமலை இன்றே நான் உன்னிடம் கேட்பதில்லை.

10. அல்லாஹ் கூறுகிறான் :- ஆதமின் மகனே! உன்னை நான் அற்பவிந்துவிலிருந்து படைத்தேன். நீ உனது

தாயின் கர்ப்பரையில இருக்கும் போதுகூட உனக்குத் தேவையான உணவை நான் கொடுத்தருளினேன். அதில் கொஞ்சத்தைக்கூட நான் குறைக்கவில்லை.

11. அல்லாஹ் கூறுகிருன் :- ஆதமின் மகனே ! உனக்காக நான் பங்கிட்டுக் கொடுத்த செல்வத்தைக் கொண்டு நீ திருப்தியடைவாயாளுல், உனது உடலையும், உள்ளத்தையும் நான் சுகம் பெறச்செய்வேன். நீ திருப்தி கொள்ளவில்லையாளுல், காடுவனுந்திரங்களில் காட்டு மிருகங்கள் தனது உணவைத்தேடி அலைவதுபோல உன்னையும் அலையச்செய்திடுவேன். அவ்வாறு நீ அலைந்து திரிந்தாலும் எனது கண்ணியத்தின் மீது ஆணையாக நான் உனக்கு நிர்ணயித்ததைத்தான் நீ அடையமுடியும். மேலும் நீ என்னிடத்திலும் மக்களிடத்திலும் தூஷணிக்கப்பட்டவனுவாய்.

12. அல்லாஹ் கூறுகிருன் :- ஆதமின் மகனே ! எவர் எனது தீர்ப்பையும், விதியையும் பொருந்திக்கொள்ளவில்லையோ எனது சோதனையின் மீது சாதனை காட்டிப் பொருமை கொள்ளவில்லையோ, எனது உபகாரத்திற்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் எனது வானப்பரப்பின் கீழிலிருந்து வெளியேறிக் கொள்ளட்டும், என்னல்லாத வேறு இறைவனையும் தேடிக்கொள்ளட்டும்.

தித்திக்கும் தேன் மொழிகள்.

1. அனைத்திலும் ஆன்மாவிற்குச் சாந்தியும், புத்துயிரும் அளிப்பது இறை நாமத்தை ஜபிப்பதேயாகும்.

2. அனைத்திலும் அதிக அன்பிற்குரியவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களேயாவார்கள்.

3. அனைத்திலும் நல்லுபதேசி மனச்சாட்சியேயாகும்

4. அனைத்திலும் நல்ல மருந்து நன்னம்பிக்கையே யாகும்.

5. அனைத்திலும் அதிகக் கஷ்டம் தரக் கூடியது கடனேயாகும்.

6. அனைத்திலும் பெரும் பாக்கியமும், சந்தோஷமும் தருவது நோயற்ற வாழ்வேயாகும்.

7. அனைத்திலும் நல்லது உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்வதேயாகும்.

8. அனைத்திலும் கூடாத காரியம் கோபமேயாகும்.

9. அனைத்திலும் நற்பெயர் தருவது கொடை கொடுப்பதேயாகும்.

10. அனைத்திலும் அழியாத பெரும் செல்வம் கல்வி யேயாகும்.

11. அனைத்திலும் அதிக சக்தி வாய்ந்தது இனிய பேச்சும் இராகமுமாகும்.

12. அனைவரிலும் பெரிய வீரன் கோபத்தை அடக் குபவனேயாகும்.

13. அனைவரிலும் பெரிய அறிவிலி உபகாரத்திற்குப் பதிலாக உபத்திரவம் செய்பவனேயாகும்.

14. அனைவரிலும் அற்பப் புத்தியுள்ளவன் செய் நன்றி மறப்பவனேயாகும்.

15. அனைவரிலும் அதிகக் கெட்டவன் புறம் பேசுபவனேயாகும்.

16. அனைவரிலும் பெரும் பாவி குர் ஆனையும், ஹதீதையும் மறுப்பவனேயாகும்.

17. அனைவரிலும் பெரிய விரோதி காக்காய் பிடிப்பவனேயாகும்.

18. அனைவரிலும் மோசக்காரன் நயவஞ்சகனேயாவான்.

19. அனைத்திலும் மன்னிக்க முடியாத குற்றம் இறைவனுக்கு இணை வைப்பதேயாகும்.

20. அனைவரிடமும் அதிகக் கெட்டவன் குழப்பக்காரனேயாவான். (மிர்காத்துல் குலூப்)

நல்லோரின் இலட்சணங்கள்.

1. இம்மையின் பற்றுதலையும், பாசத்தையும் குறைத்து மறுமையின் பற்றுதலையும், பாசத்தையும் அதிகமாக்கிக் கொள்வது.

2. வணக்கம் புரிவது, திருமறையை ஓதுவது, தஸ்பீஹ் செய்வது போன்ற நற்கிரியைகளின் பக்கமே நோக்கத்தைத் திருப்புவது.

3. அவசியமற்ற பேச்சுக்களை அகற்றிக் கொள்வது

4. ஐவேளைத் தொழுகையினையும் அவைகளுக்குரிய நேரங்களில் நிறைவேற்றுவது.

5. தகாததும், சந்தேகத்திற்கிடமானதுமான பொருள்களை உண்ணாமலும், உபயோகிக்காமலுமிருப்பது.

6. நல்லோரின் சபைகளிலே அமர்ந்து அவர்களின் நல்லுபதேசங்களைச் செவியேற்பது.

8. தர்ம சிந்தனையுடையவராக இருப்பது.

9. சிருஷ்டிகளிடம் அன்பும், இரக்கமும் உள்ளவராக இருப்பது.

10. மக்களுக்கு ஊழியராகவும், உபகாரியாகவு மிருப்பது,

11. ஒவ்வொரு நேரமும், மரணத்தை ஞாபிப்பது.

12. எவரிடமும் இனிமையாகவும் இணக்கமாகவும் பேசுவது.

13. தீமை செய்தோருக்கும் நன்மையே செய்ய நாட்டங் கொள்வது.

14. பிறர் செய்த குற்றங்குறைகளை மன்னிப்பது.

15. பிரிந்து செல்லும் பந்துக்களை இணைத்து வாழ்வது.

16. பெரியோர்களைக் கண்ணியப்படுத்துவது.

17. சிறியோர் மீது இரக்கங் கொளளவது,

18. மலர்ந்த முகமுடையவராக இருப்பது.

19, பயபக்தி உடையவராக இருப்பது.

20. கொடை கொடுக்கும் கரம் உடையவராக இருப்பது. (துர்ரத்துல் வாயிஜீன்)

தீயோரின் இலட்சணங்கள்.

1. மறுமையின் பற்றுதலைக் குறைத்து இம்மையின் பற்றுதலை மனதில் கொண்டு சதா பொருள் சேமிப்பதிலேயே மூழ்கிக் கிடப்பது.

2. மனோ இச்சைகளுக்கு இசைந்து அதன்படியே நடப்பது.

3. பொய், புறம் பேசுவதையே தொழிலாகக் கொள்வது.

4. தீயோருடனேயே சகவாசம் கொள்வது.

5. துற்குணங்களையே கையாள்வது.

6. ஐவேளைத் தொழுகைகளையும், அவைகளுக்குரிய நேரங்களில் தொழாமலிருப்பது.

7. பெருமையை விரும்பி பெருமைக்காகவே எதையும் செய்வது.

8. பிறர் செய்யும் நல்ல காரியங்களைத் தடுப்பது.

9. சிருஷ்டிகளின்பால் அன்பு காட்டாமலும், இரக்கங்கொள்ளாமலுமிருப்பது.

10. கஞ்சத்தனமுடையோராக இருப்பது.

11. மரணத்தை மறந்து மனம் நாடியபடியெல்லாம் நடப்பது.

12. செய்த பாவங்களை நினைந்து வருந்தாமலிருப்பது.

13. தான் செய்த நன்மைகளைப் பெரிதென மதிப்பது

14. உலக விஷயங்களில் தன்னைக்காண மேலானவர்களைக் கண்டு ஏங்குவது.

15. மார்க்க விஷயங்களில் அலட்சியமாக இருப்பது.

16. பிறரின் குற்றங்குறைகளை வெளிப்படுத்துவது.

17. அவசியமற்ற பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பது.

18. கடு கடுத்த முகமுடையோராக இருப்பது.

19. கல் நெஞ்சம் உடையவராக இருப்பது.

20. பெரியோரைக் கண்ணியப்படுத்தாமலும், சிறியோர் மீது இரக்கங் கொள்ளாமலுமிருப்பது.

(துர்ரதுல் வாயிஜீன்)

4000 வருடங்களில் நான்பெற்ற எட்டு விஷயங்கள்.

மேன்மை தங்கிய லுக்மானுல்ஹகீம் அவர்கள் கூறுகிறார்கள் அதாவது:- நான் நாலாயிரம் வருஷங்கள் நாலாயிரம் நபிமார்களுக்குப்பணிவிடை செய்திருக்கிறேன் அந்த நபிமார்களின் நல்லுபதேசங்களிலிருந்து எட்டே விஷயங்களைத்தான் தேர்ந்தெடுத்தேன். அவைகள் :-

1. நீ தொழுகையில் இருக்கும் போது முகஸ்துதியை விட்டும் உன் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்திக்கொள்.

2. நீ பிறருடைய வீட்டிலிருக்கும் போது அங்குமிங்கும் நோட்டமிடாமல் உன் கண்களைப் பேணிக்கொள்.

3. நீ மக்களின் மத்தியிலிருக்கும் போது அடாதுடியான அருவெறுப்பான பேச்சுக்களை விட்டும் உன் நாவைப் பேணிக்கொள்.

4 நீ சாப்பிடும்போது வாய் நிறைய உணவைச் செலுத்துவதை விட்டும் உன் தொண்டையைப் பேணிக் கொள்.

5. நீ எத்தொழில் செய்தாலும், எந்நிலையிலிருந்தாலும் இறைவனை தியானம் செய்து கொள்.

6. சகல இன்பங்களையும் இழக்கச் செய்யும் மரணத்தை அதிகமாக ஞாபித்துக்கொள்.

7. நீ பிறருக்குச் செய்த உபகாரத்தைப் பெரிதென மதிக்காமல் அதை மறந்து விடு.

8. பிறர் உனக்குச் செய்த உபகாரங்களை மதித்து அதற்கு நன்றி செய்ய நாட்டங்கொள்.

இறை அச்சத்தின் அடையாளங்கள்.

1. இறைவனின் ஏவல்களை சிரமேற்கொண்டு செயல் புரிவதில் இம்மியேனும் சருகாமலிருப்பது.

2. இறைவனால் விலக்கப்பட்டவைகளை விட்டும் விலகி இருப்பது.

3. பொய், புறம், கோள், வீண் பேச்சுக்களை விட்டும் நாவைப்பேணி, திக்ரு, தியானம், திருமறை ஓதுதல் முதலிய நல்ல காரியங்களில் நாவை ஈடுபடுத்துவது.

4. ஹராமான உண்ணல் குடித்தலை விட்டும் வயிற்றைப் பாதுகாத்துக் கொள்வதோடு, ஹலாலான உணவாயினும் அளவுக்குமீறி உண்ணாமல், பசி நீங்கும் அளவுக்கு உண்பது.

5. விலக்கானவைகளைப் பாராமலும், உலகப் பொருள்களை ஆசைகொண்டு நோக்காமலும் தன் பார்வையைப் பாதுகாத்துக் கொள்வது. அதாவது எதைப் பார்ப்பினும் இறைவனின் தத்துவத்தை உணரும் கருத்துடன் நோக்குவது.

6. திருட்டு, கொலை, கொள்ளை முதலான தகாத காரியங்களை விட்டும் தனது கைகளைப் பாதுகாத்துக் கொள்வது.

7. பாவமான காரியங்களின் பக்கம் நடந்து செல்லாமல் தனது கால்களைப் பாதுகாத்துக் கொள்வது.

8. கோபம், குரோதம், பகைமை, பொறாமை, அகப்பெருமை, ஆணவம் முதலியவைகளை விட்டும் தனது இதயத்தைப் பாதுகாத்துக் கொள்வது.

9. முகஸ்துதி, பிறரின் தயவு தாட்சண்யம் முதலிய எண்ணம் ஏற்படாவண்ணம் தனது வணக்கத்தை இறைவனுக்கென்றே ஆக்கிக்கொள்வது,

10. உண்மை, நல்லவைகளைத்தவிர வேறு எதையும் கேளாமல் தனது காதுகளைப் பாதுகாத்துக் கொள்வது. (துர்ரத்துல் வாயிஜீன்)

நான்கு வினாக்களின் விடை.

அபாஎஜீதுல் புஸ்தாமீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :- நான் 4440 பெரியார்களிடம் நான்கு வினாக்களுக்கு விடைதேடி அலைந்தேன் ஆனால் அவர்கள் அளித்த விடை என் இதயத்திற்குச் சாந்தியளிக்காததால் மனக்கலக்கமடைந்து ஓர்மையற்றிருந்தேன். பின்புகஃபத்துல்லாஹ்விற்குச்சென்று கஃபாவின் வாயிலிலே தொங்கிக்கொண்டிருந்தவளையதனைப் பிடித்து இறைவா என்மார்க்கத்தின் விமோசனம் எதிலிருக்கிறதெனக் கதறி அழுதவண்ணம் முறையிட்டுக் கேட்டேன் அப்பொழுது ஒரு வானவர், ஏ! அபாஎஜீதுல் புஸ்தாமியே வாக்குறுதியை நிறைவேற்றுவதிலே உன் மார்க்கத்தின் விமோசனமிருக்கிறது எனப் பகர்ந்தார் இறைவா எனது ஈமானின் விமோசனம் எதிலிருக்கிறதெனக்கேட்டேன், அப்பொழுது ஒரு வானவர், ஏ! அபாஎஜீதுல்புஸ்தாமியே வீண்பேச்சு, பொய், புறம் கெட்ட பேச்சு முதலியவைகளை விட்டும் நாவைப் பேணுவதிலே உன் ஈமானின் விமோசனமிருக்கிறது என அழைத்துப் பகர்ந்தார் ஏ! இரட்சகா! எனது ஆன்மாவின் விமோசனம் எதிலிருக்கிறது என்று கேட்டேன். அப்பொழுது ஒரு வானவர், ஏ! அபாஎஜீதுல் புஸ்தாமியே! மனோ இச்சை

களை விடுவதிலே உன் ஆன்மாவின் விமோசனமிருக்கிறது என்று அழைத்துப் பகர்ந்தார். ஏ! இறைவா! என் உள்ளத்தின் விமோசனம் எதிலிருக்கிறது என்று கேட்டேன். அப்பொழுது ஒரு வானவர், உலக இன்பங்களை விடுவதிலே உன் உள்ளத்தின் விமோசனம் இருக்கிறது என்று அழைத்துப் பகர்ந்தார். (மிர்காத்துல்குலூப்)

தினந்தோறும் மண்ணறை விண்ணப்பிக்கிறது!

ஒருவர் மரணமானபிறகு அடக்கம் செய்தபின் (கப்ரு) மண்ணறை கீழ்க்கண்டவாறு விண்ணப்பிக்கும் என்று ஹதீத் ஷரீபிலே கூறப்பட்டுள்ளது :-

1. ஏ! ஆதமுடையமகனே! நீ என்னுடைய முதுகின் மீது நடந்து சுற்றித்திரிகின்றாய், நீ எனது வயிற்றுக்குள் அசைவற்றுத்துமும் பாமல் கிடப்பாய்.

2. ஆதமுடையமகனே! நீ என்னுடைய முதுகின் மீது தகாத (ஹறாமான) பொருள்களை யெல்லாம் தின்று கொண்டிருக்கிறாய். உன்னை என்னுடைய வயிற்றுக்குள் பாம்புகளும், புழுக்களும் தின்னும்.

3. ஆதமுடையமகனே! நீ என்னுடைய முதுகின்மீது பாவங்கள் பல செய்து கொண்டிருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் பற்பல விதமான வேதனைகள் செய்யப் படுவாய்

4. ஆதமுடையமகனே! நீ என்னுடைய முதுகின் மீது சிரித்துக்கொண்டிருக்கிறாய், நீ எனது வயிற்றுக்குள் அழுதுகொண்டிருப்பாய்.

5. ஆதமுடையமகனே ! நீ என்னுடைய முதுகின் மீது சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறாய், நீ என் வயிற்றுக்குள், கவலையும். கைசேதமும் அடைவாய்.

6. ஆதமுடையமகனே ! நீ என்னுடைய முதுகின் மீது உண்டு சுகித்துக் கொழுத்துப்பருத்து இருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் சின்னு பின்னப்பட்டு சிதைந்து, சீரழிந்து விடுவாய்.

7. ஆதமுடைய மகனே ! நீ என்னுடைய முதுகின் மீது வெளிச்சத்தில் இருக்கிறாய், நீ எனது வயிற்றுக்குள் கும்இருட்டில் கிடப்பாய்.

8. ஆதமுடைய மகனே ! நீ என்னுடைய முதுகின் மீது கண்ணியமாகவும், க ம் பீ ர மா க வு ம் இருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் இழிவாக்கப்படுவாய்.

9. ஆதமுடைய மகனே ! நீ என்னுடைய முதுகின் மீது மனைவி. மக்கள். உற்றார் உறவினருடன் உல்லாசமாக இருக்கிறாய், நீ என்னுடைய வயிற்றுக்குள் தன்னந் தனியே தவித்துக்கொண்டிருப்பாய்.

10. ஆதமுடைய மகனே ! நீ என்னுடைய முதுகின் மீது வாசனைத்திரவியங்கள் பூசி மணங்கமழ அலங்காரமாகத்திகழ்கிறாய். நீ என்னுடைய வயிற்றுக்குள் நாற்றமெடுத்து, துர்வாடைபிடித்து வெறுக்கப்படுவாய்.

11. ஆதமுடைய மகனே ! நீ என்னுடைய நெருக்கத்தையும், என்னுள் நிகழவிருக்கும் விதவிதமான வேதனைகளையும், பயங்கர சம்பவங்களையும் அறியாமல் திரிகிறாய்.

12. ஆதமுடைய மகனே ! நான் தனிமையின் வீடு,

இருள் சூழ்ந்த இடம் என்பதை எந்த வஸ்து உன்னை மறக்கடித்தது ?

13. ஆதமுடைய மகனே! நீ இறைவனுக்கு வழிப்பட்டு நடந்திருந்தால் நான் உனக்கு சொர்க்கப் பூங்காவாக ஆகுவேன். வழிப்பட்டு நடக்காதிருந்தால் நான் உனக்கு வேதனைக்குரிய இடமாக ஆவேன்.

14. ஆதமுடைய மகனே! நீ ஓதிய குர்ஆன் உனக்கு என் வயிற்றுக்குள் துணையாக இருக்கும். நீ தொழுத தஹஜ்ஜுது தொழுகை உனக்கு பிரகாசம் கொடுக்கும், நீ மறைமுகமாக செய்த தர்மம் உனக்கு விரிப்பாக உதவும். மற்றும் நீ செய்த எல்லா நல்ல அமல்களும் உனக்கு புதை பொருளாக நிற்கும்.

15. ஆதமுடைய மகனே! நீ நாடிய படியெல்லாம் நடந்து திரிகிறாய், சிரிக்கிறாய், மகிழ்கிறாய், பொருள்சேமிக்கிறாய், உட்காருகிறாய் இன்னும் என்னென்னமோ வெல்லாம் செய்கிறாய் ஆனால் ஒரு நாள் நீ என்னுள் வந்தே ஆகவேண்டும், அப்போது வேதனைப்படுவாய், வியாகூலமடைவாய், அழுது புலம்புவாய், துயரப்படுவாய், இழிவாக்கப்படுவாய், இருளிலே தனித்துக்கிடப்பாய்.

(முன் தஹுல் மவாயிஜ்)

ஏ! தாவூதே ஞானோபதேசம் பெருவீராக.

இறைவன் ஹஜ்ரத் தாவூத் (அலை) அவர்களை நோக்கி ஏ! தாவூதே! நீர் லுக்மானுல் ஹகீமிற்காக ஒரு ஆசனத்தை அமைத்து அதில் அவரை அமரச் செய்து அவரிடம்

ஞானோபதேசம் பெறுவீராக என்று ஆக்ஞை யிட்டான். அவ்வாறே ஹஜ்ரத் தாவூது (அலை) அவர்கள் ஒரு சிம்மாசனத்தை அமைத்து அதில் லுக்மானுல் ஹகீமை அமரச் செய்து, ஒரு மாணவன் ஆசிரியரிடம் அமருவது போன்று பணிவுடன் அமர்ந்து உபதேசம் புரிய வேண்டினார்கள் அப்போது லுக்மானுல் ஹகீம அவர்கள் ஏ! தாவூதே! முனமோர், பின்னோர்களுடைய நற்கிரியைகள் எதில் அடங்கியுள்ளதோ அத்தகைய ஐந்து விஷயங்களை உமக்கு உபதேசிக்கிறேன். அவைகளை பாடமிட்டுப்பண் படைவீர்களாக என்று கூறினார்கள் அவைகள் :—

1. ஏ! தாவூதே! நீ உலகில் எந்த அளவு தங்குவாயோ, அந்த அளவுதான் உனக்கு உலகப்பாசமும், பற்றும் இருக்கவேண்டும்.

2. ஏ! தாவூதே நீமறுமையி (சொர்க்கத்தி) ல் எவ்வளவுகாலம் தங்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாயோ அவ்வளவு அதிகமாக நற்கிரியைபுரி.

3. ஏ! தாவூதே! உன்னால் நரக நெருப்பை எவ்வளவு தூரம் பொருத்துக் கொள்ளமுடியுமோ, அவ்வளவு தூரம் பாவம் செய்வதில் வீரங்கொள்.

4. ஏ! தாவூதே! உனது எஜமானாகிய அல்லாஹ்வினுடைய தேவை உனக்கு எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நீ அல்லாஹ் விற்கு வழிபட்டு நட.

5 ஏ! தாவூதே! உனது எஜமானாகிய அல்லாஹ்விற்கு மாறு செய்ய நாடினால் அவனை உன்னைக்காணாத இடத்திற்குச் சென்றுவிடு, (மிர்க்காத்துல் குலூப்)

பள்ளியின் ஒழுக்கங்கள்.

1. பள்ளிவாசலுக்கு வந்தவுடன் அங்கு எவரேனும் இருந்தால் அவர்களுக்கு சலாம் கூறவேண்டும். எவரும் இல்லையானால். அஸ்ஸலாமு அலைனாவஅலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் என்று கூறிக் கொள்ள வேண்டும்.

2. பள்ளியினுள் சென்றதும் தஹிய்யத்துல்மஸ்ஜித் இரண்டுரக்க அத்தயில் தொழவேண்டும்.

3. பள்ளியினுள், விற்பனை, கொடுக்கல், வாங்கல் செய்யக் கூடாது.

4. பள்ளியினுள், கத்தி, வாள்முதலான ஆயுதங்களை உறையிலிருந்து உருவி எடுக்கக்கூடாது.

5. காணமற்போன பொருள்களைப் பள்ளியினுள் தேடவோ, விசாரிக்கவோகூடாது.

6. பள்ளியினுள் திக்ரு, அல்லாமல் மற்றவைகளை சப்தமிட்டுப் பேசலாகாது.

7. பள்ளியினுள் உலக சமாச்சாரங்களை பேசலாகாது அவ்வாறு பேசுவது நாற்பது வடத்திய நல் அமல்களை அழித்துவிடும்

8. பள்ளியினுள் அமர்ந்திருப்போரை விலக்கிக் கொண்டு உள்ளே செல்லலாகாது.

9. தொழுகைக்கு இடம்பிடிப்பதற்காக மற்றவர்களுடன் சச்சரவு செய்யலாகாது.

10. சப்பி (வரிசையி)ல் நிற்கும் போது பிறரை இடித்து இடஞ்சல் செய்யக்கூடாது.

11. தொழுபவருக்கு முன்னே குறுக்கே செல்லக் கூடாது.

12. பள்ளியினுள் எச்சல் உமிழக்கூடாது ஜன்னல் வழியாகவும் எச்சல் துப்பக்கூடாது.

13. பள்ளியினுள் விரல்களை சொடக்கு (நெட்டி) விடக்கூடாது.

14. பள்ளிக்குள் பைத்தியக்காரர்களையும் சிறுவர் களையும் வரவிடலாகாது.

15. பள்ளியை, கூழங்குப்பை அசுத்தமானவைகளை விட்டும் பரிசுத்தமாக்கிவைக்க வேண்டும்.

16. பள்ளியிலிருக்கும் போது, திக்ரு, திருக்குர் ஆனை ஓதுவது, தஸ்பீஹ் செய்வது முதலிய நற்கருமங் களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

ஷைதானின் நேயர்கள்.

ஒரு நாளன்று திருநபி (ஸல்) அவர்கள் ஷைதானை நோக்கி, எனது உம்மத்தோரில் உனக்கு நேயர்கள் எத்தனைபேர், என்று கேட்டார்கள் அதற்கு ஷைதான் 10 பேர் என்று கூறினன், அவர்கள் :—

1. அநீதமாக ஆட்சிபுரிந்து மக்களைக் கஷ்டப்படுத் தும் அரசன்.

2. பொருளை கொள்கிறவன்.

3. பொருளை எவ்வாறு சேமிக்கிறோம் அதை எவ் வாறு செலவு செய்கிறோம் என்று இலட்சியம் செய்யாத சீமான்.

4. அநீதம் செய்யும் அரசனை உண்மைப்படுத்தும் அறிஞன்.

5. அளவு, நிறுவையில் மோசம் செய்யும் வியாபாரி

6. மக்கள் பட்டினியாலும், பஞ்சத்தாலும் பரதவிக்கும்போது விலை ஏறட்டும் என்று எண்ணி உணவுப் பொருள்களை சேமித்து வைத்திருப்பவன்.

7. விபச்சாரம் செய்யும் ஆண்களும், பெண்களும்.

8. வட்டி வாங்குகிறவர்கள்.

9. உலோபிகள்,

10. மதுபானம் அருந்துகிறவர்கள்.

ஷைத்தானின் விரோதிகள்.

ஒரு நாளன்று பெருமானார்(ஸல்)அவர்கள் ஷைத்தானை நோக்கி எனது உம்மத்தோரில் உனக்கு விரோதிகள் எத்தனைபேர் என்று கேட்டார்கள். அதற்கு ஷைத்தான் இருபது பேர்கள் என்று கூறினான். அவர்கள் :—

1. ஏ ! முஹம்மதே நீர் எனது முதல் விரோதியாவீர்.

2. கற்றபடி நடந்தொழுகும் ஆலிம் (அறிஞன்)

3. குர் ஆன்ஷரிபை மனனம் செய்து அதிலுள்ளபடி நடந்தொழுகும் ஹாபிஸ்.

4. அல்லாஹ்வின் திருப்தியை நாடி ஐவேளையும் பாங்கு சொல்லும் முஅத்தின். (மோதினார்)

5. ஏழை எளியோர்மீது இரக்கம் கொள்கிறவர்.

6. இரக்கமுடைய இதயமுள்ளவர்.

7. உண்மையான விஷயங்களுக்கு அடிபணிந்து நடப்பவர்.

8. அல்லாஹ்வின் வணக்கத்திலே வளர்ந்தோங்கிய வாலிபர்.

9. (ஹலால்) அனுமதிக்கப்பட்ட உணவை உண்பவர்.

10. இறைவனுக்கென்றே நேசங்கொள்ளும் இரு வாலிபர்கள்.

11. ஐவேளையும் ஜமாஅத்தோடு தொழுகிறவர்கள்

12. ஜனங்களெல்லாம் நித்திரை செய்யும்போது விழித்திருந்து வணக்கம் புரிகிறவர்.

13. (ஹறாம்) விலக்கான காரியங்களை விட்டும் விலகி இருப்பவர்.

14. எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் உபதேசம் செய்யும் உபதேசி.

15. எப்போதும் ஒளுவுடனேயே இருப்பவர்.

16. நல்லொழுக்க நற்குணசீலர்.

17. ஈவு, இரக்கமுள்ள, தன்மை உடையவர்.

18. அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டவைகளை உண்மையாக்கி வைப்பவர்.

19. விதவைகளுக்கு உபகாரம் செய்கிறவர்.

20. மரணத்திற்குத் தயாராக இருப்பவர்.

அல்லாஹ்வின் விரோதிகள்.

மறுமை நாளில் இறைவன் சிலரை அருள் கொண்டு பார்க்கவும் மாட்டான். அவர்களுடன் பேசவும் மாட்டான் அவர்களின் பாவத்தை மன்னித்துப் பரிசுத்தப்படுத்தவு

மாட்டான். அவர்களுக்கு வித விதமான வேதனையைக் கொடுப்பான். அவர்களே அல்லாஹ்வின் விரோதி களாவார்கள் அவர்கள் :—

1. தனது சொந்த இடத்திலிருக்கும் தண்ணீர் தடாகத்தில் தேவைக்கு அதிகமாகத் தண்ணீர் இருந்தும் அதில் வழிப் போக்கரையும் மற்றவர்களையும் குடிக்க விடாமல் தடுப்பவர். 2. பொய் சத்தியம் செய்து தனது சரக்கின் குற்றங்குறைகளை மறைத்து விற்பனை செய்யும் வியாபாரி. 3. உலக ஆதாயத்தை அடைவ தற்காக யாராவது ஒரு (ஷைகு) பெரியாரிடம் (பைஅத்) உடன்படிக்கை செய்து கொள்கிறவர். 4. விபச்சாரம் செய்யும் வயோதிக ஆடவர், பெண்டீர். 5. உபகாரம் செய்து உபத்திரவமும் செய்கிறவர். 6. கரண்டை மொளி மறையும்படி ஆடை அணிகிறவர். 7. பெருமை பாராட்டித் திரியும் ஏழைகள். 8. ஒரு பொருளை விலை பேசி விற்று விட்டு மறுபடியும் நான் அதை விற்கவில்லை என்று கூறி சத்தியமும் செய்து திருப்பி வாங்கிக்கொள்கிறவர். 9. பருவம் அடையாத சிறு குழந்தைகளிடம் தகாத வேலை செய்கிறவர். 10. தன் கையால் விந்தை வெளியாக்குகிறவர் 11. ஜீவ வர்க் கங்களைப் புணர்ச்சி செய்கிறவர். 12. மனைவியின் பின் துவாரத்தில் புணருகிறவர். 13. ஒரு பெண்ணை யும் அவளது மகளையும் சேர்த்து நிக்காஹ் செய்கிறவர். 14. அண்டை வீட்டாரைத் துன்புறுத்துகிறவர். 16. தனது மஹல்லாவிலுள்ள பள்ளியில் தொழாதவர்.

17. தனது வீட்டிலிருக்கும் குர்ஆன்ஷரீபை ஓதாமல வெருமனே வைத்திருப்பவர். 18. குர்ஆன்ஷரீபை மனனம் செய்தும் அதிலுள்ளபடி நடவாத ஹாபிஸ்ஆலிம் 19. நற்குணமும், நல்லொழுக்கமும் உள்ள தனதுமனைவியைத் துன்புறுத்தித் துயரத்துக்குள்ளாக்குகிறவர். 20. நற்குணமும், நல்லொழுக்கமும் உள்ள தனது கணவனை, துன்பத்திற்குள்ளாக்கும் மனைவி. 21. உலமாக்களின் சொல்லுக்கு செவி சாய்க்காதவர். 22. குர்ஆன்ஷரீபில் தன் சொந்த அபிப்ராயத்தைப் புகுத்தி விரிவுரை செய்கிறவர். அதாவது தன் இஷ்டத்திற்குத் தக்கவாறு வியாக்கியானம் செய்கிறவர் 23. இறைவனால் விதிக்கப்பட்ட விதியைப் பொய்யாககுகிறவர். 24. இறைவன் ஹருமாக்கிய (விலக்கிய) வைகளை ஹலாலாக்கிய (ஆகுமாக்கிய)வர். 25. இறைவன் ஹலாலாக்கிய (ஆகுமாக்கிய)வைகளை ஹருமாக்கிய (விலக்கிய)வர். 26. திருநபியின் சுன்னத்துகளை விட்டுவிட்டு தன் நாட்டப்படியெல்லாம் நடந்தொழுகியவர். 27. பிரஜைகளுக்கு செயலாற்ற முடியாத சட்டங்களைவிதித்து அக்ரமஆட்சிபுரிந்த அரசன். 28. அவசியமும், உரிமையும் இல்லாமல் உயிர்வதை செய்தவர். 29. பிறரின் உயிருக்கும், உடமைக்கும் பங்கம் விளைத்தவர். 30· தன் மனைவியைப் பிறருக்குக் கூட்டிக் கொடுத்தவர். 31. இறைவனால் விதிக்கப்பட்ட ஜக்காத்தைக் கொடாதவர். 32 ஹஜ்ஜு செய்யக் கடமைப்பட்டிருந்தும் அதை நிறைவேற்றாதவர். 33. மக்களின் மத்தியில் புரட்சியை உண்டாக்கியவர்.

34. மதுபானம் அருந்துவதையே பழக்கமாகக் கொண்டவர், 35. கூலிக்காரர்களிடம் வேலை வாங்கிக் கொண்டு அவர்களின் கூலியைக் கொடாதவர் (முன்தஹல்மவாயிஜ்.)

இறைவன் மூசா (அலை) அவர்களை நோக்கி!

ஒரு நாளன்று இறைவன் ஹஜ்ரத் மூசா (அலை) அவர்களை நோக்கி, ஏ! மூசாவே நீர் எனக்காக வேண்டி என்னென்ன நற்கிரியைகள் புரிந்தீர் என்று கேட்டான் அப்போது ஹஜ்ரத் மூசா (அலை) அவர்கள் இறைவா! நான் உனக்காகவே தொழுதேன் உனக்காகவே நோன்பு நோற்றேன். உன்னையே சதா தஸ்பீஹ் செய்தேன் என்று கூறினார்கள். அப்போது இறைவன் ஏ! மூசாவே! நீர் ஸிராத்துல் முஸ்தக்கீம் பாலத்தை மின்னல் போன்றுவிரைவாகக் கடந்து செல்வதற்காகத் தொழுதீர். உம்மை நரகத்தை விட்டும் பாதுகாத்துக் கொள்வதற்காக நீர் நோன்பு நோற்றீர், உமக்கு சொர்க்கத்தில் பல பதவி (தரஜா)கள் உயர்த்தப்படுவதற்காக தஸ்பீஹ் செய்தீர், இவைகளெல்லாம் நீர் உமக்காகச் செய்து கொண்டவைகளாகும். ஆனால் என் திருப்திக்குரிய எனக்குச் சொந்தமான நற்கிரியை புரிந்திருக்கிறீரா? என்று கேட்டான் அது சமயம் ஹஜ்ரத் மூசா (அலை) அவர்கள் கோவென்று அழுது இறைவா உனக்குச் சொந்தமான அத்தகைய அமல்கள் எவை? அவைகளை அறிவித்தருள்வாயாக எனக் கேட்டார்கள். அப்போது இறைவன் கீழ்க்காணும் அமல்களை

அறிவித்து அவைகள்தான் என் திருப்திக்குரியவை என்றும் கூறினான். 1. ஏ! மூசாவே பசித்தோருக்கு உணவளித்துப் பசியாற்றுவீராக. 2. ஏ! மூசாவே! தாகித்தோருக்குத் தண்ணீர் புகட்டித் தாகத்தைத்தணிப்பீராக. 3. துணியில்லாதவருக்குத்துணி அணிவிப்பீராக. 4. அநீதத்திற்குள்ளானவருக்கு உதவி புரிவீராக. 5 அறிஞர்களுக்(உலமாக்களுக்)கு சங்கை செய்வீராக. 6. அபயம் தேடுவோருக்கு அபயம் அளிப்பீராக. 7. உமது ஒவ்வொரு மூச்சையும், பேச்சையும், செயலையும் முகஸ்துதியைவிட்டும் தூய்மையாக்கிக் கொள்வீராக, (மிர்காதுல்குலூப்.)

ஹதீதுல்குத்ஸிய்யிலே!

இறைவன் ஹதீதுல் குத்ஸிய்யிலே கூறுகிறான். ஏ! ஆதமுடைய மகனே உன்னிலிருந்து ஆறு காரியங்கள் ஏற்பட்டால் என்னிலிருந்து ஆறு காரியங்கள் உண்டாகும் என்று கூறியிருக்கிறான். 1. ஏ! ஆதமுடைய மகனே உனக்கு சொர்க்கம் என்னிடம் கிடைக்கும். ஆனால் உன்னிலிருந்து வழிப்பாடு உண்டாகவேண்டும். 2. ஏ! ஆதமுடைய மகனே! தெய்வீகத்தன்மை என்னிலிருந்து உண்டாகும் ஆனால் அடிமைத்தனம் உன்னிலிருந்து உண்டாகவேண்டும். 3. ஏ! ஆதமுடைய மகனே! ஒப்புக்கொள்வது என்னிலிருந்துஏற்படும். ஆனால் உன்னிலிருந்து பிரார்த்தனை உண்டாகவேண்டும். 4. ஏ! ஆதமுடைய மகனே! சோதனை என்னிலிருந்து உண்டாகும் ஆனால் பொறுமை உன்னிலிருந்து உண்டாக

வேண்டும். 5. ஏ! ஆதமுடையமகனே! ஆகாரம் கொடுப்பது என்னிடமிருந்து ஏற்படும். ஆனால் நன்றி செலுத்துவது உன்னிலிருந்து உண்டாகவேண்டும். 6. ஏ! ஆதமுடைய மகனே! மன்னிப்பு என்னிலிருந்து உண்டாகும். ஆனால் மன்னிப்புத் தேடுவது உன்னிலிருந்து உண்டாகவேண்டும். (மிர்க்காத்துல்குலூப்)

அதிகமாக சிந்தனை செய்யுங்கள்.

எனது உம்மத்தோர்களே! உங்களுக்கு ஐந்து விஷயங்களை உபதேசிக்கிறேன், அவைகளை அதிகமாக சிந்தனை செய்து கொள்வீர்களானால் உங்களுக்கு இறைவனின் அன்பும் அருளும் உண்டாகுமென நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். 1. ஜனங்கள் உங்களுக்குச் செய்த உபகாரங்களை அதிகமாக சிந்தனை செய்வதைவிட அல்லாஹ் உங்களுக்கு செய்திருக்கும் உபகாரங்களை அதிகமாக சிந்தனை செய்யுங்கள். 2. இம்மையை அதிகமாக சிந்தனை செய்வதைவிட அதாவது இவ்வுலகின் இன்பங்களை நினைப்பதைவிட மறுமையின் இன்பங்களை அதிகமாக நினையுங்கள். 3. நீங்கள் செய்திருக்கும் நற்கிரியைகளை அதிகமாக சிந்தனை செய்வதைவிட உங்களில் நிகழ்ந்துள்ள துற்கிரியைகளை அதிகமாக சிந்தனை செய்யுங்கள். 4. நீங்கள் உங்களின் ஜீவியத்தை அதிகமாக சிந்திப்பதைவிட உங்களுக்கு நிகழப் போகும் மரணத்தை அதிகமாக சிந்தனை செய்யுங்கள். 5. பிறருடைய குற்றங்குறைகளை

அதிகமாக சிந்திப்பதைவிட உங்களின் குற்றங்குறைகளை அதிகமாக சிந்தித்துத் திருந்திக் கொள்ளுங்கள்.

(மிர்க்காதுல்குலூப்)

ஈமானால் சிறந்தவர் யார்?

ஒரு நாளன்று நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் சங்கைமிகு ஸஹாபாக்களை நோக்கிக் கீழ் கண்டவாறு வினவினார்கள் :—

நாயகம் :— தோழர்களே! உங்களிடத்தில் ஈமானால் சிறந்தவர்யார்?

ஸஹாபாக்கள் :— இறைத்தூதரே! மலக்கு (வானவர்) கள் தான் ஈமானால் சிறந்தவர்கள் என்று கருதுகிறோம்.

நாயகம் :— மலக்குகள் அல்லாஹ்வின் சந்நிதானத்திலிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு ஈமான் கொள்ளாமலிருக்க இயலும்? ஆதலால் அவர்கள் ஈமானால் சிறந்தவர்களல்ல.

ஸஹாபாக்கள் :— அவ்வாறானால் நபிமார்கள் தான் ஈமானால் சிறந்தவர்கள் என்று கருதுகிறோம்.

நாயகம் :— நபிமார்கள் மீது அல்லாஹ்வின் வஹீ இறங்கிக் கொண்டிருக்கும் போது அவர்கள் எவ்வாறு ஈமான் கொள்ளாமலிருக்க முடியும்? அவர்களும் ஈமானால் சிறந்தவர்களல்ல.

ஸஹாபாக்கள் :— அப்படியானால் நாங்கள் தான் ஈமானால் சிறந்தவர்கள் என்று கருதுகிறோம்.

நாயகம் :— நான் உங்களின் மத்தியிலிருக்கும் போது நீங்கள் எவ்வாறு ஈமான் கொள்ளாமல் இருக்க இயலும்? நீங்களும் ஈமானுல் சிறந்தவர்களல்ல.

ஸஹாபாக்கள் :—அப்படியென்ருல் அது பற்றி அல்லாஹ் வும் அவனுடைய தூதருமே அதிகம் அறிந்தவர் களாவார்கள்.

நாயகம் :— என்னிடத்தில் ஈமானுல் சிறந்தவர் யாரென் ருல் பிற்காலத்தில் ஒரு குழுவினர் தோன்றுவார் கள். அவர்கள் வேதத்தை (குர்ஆன்ஷரீபை)ப் பெற்று, அது அல்லாஹ்வின் திருவாக்கியம் என்று நம்பி விஸ்வாசங் கொண்டு அதைக் கற்றுணர்ந்து அதன் போதனைப்படி நடந்தொழுகுவார்கள். அவர் களே ஈமானுல் சிறந்தவர்களாவார்கள். (கருத்து) எதையும் பார்த்து நம்பிக் கொள்வதை விட பார்க் காமலே நம்புவதுதான் சிறந்தது எனபதை மேற் காணும் சம்பாஷணை விளக்குகிறது. (மிஷ்காத்)

மறுமையில் நிகழும் ஓர் சம்பவம்.

இறைவன் மறுமை நாளில் ஒரு மனிதனுடைய நன்மை, தீமைகளை கணக்கிடும்படி மலக்குகளுக்கு உத்திர விடுவான். அதன்படி கணக்கிட்டுப் பார்க்கும் போது அம்மனிதனின் தீமைகள நன்மைகளைக்காண அதிகமாகத் தெரியும். அதற்காக அம்மனிதனை நரகத்திற்கு அழைத்துச் செல்லுமாறு இறைவன் மலக்குகளுக்கு உத்தரவு செய் வான். அதன்படி ஹஜ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அம் மனிதனை நரகத்திற்கு அழைத்துச் செல்கையில், அம்மனித

விடம் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்குமாறு ஹஜ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்களுக்கு ஆக்ஞையிடுவார். அதற்கேற்ப கீழ்கண்டவாறு சம்பாஷணை நடக்கும்.

ஜிப்ராயீல் :— ஏ! மனிதனே! நீ உலமாக்களி (அறிஞர்களி)ன் சபைகளிலே உட்கார்ந்திருந்ததுண்டா?

மனிதன் :— நான் உட்கார்ந்திருந்ததில்லை.

ஜிப்ராயீல் :— ஏ! மனிதனே! நீ உலமாக்களுடன் உட்கார்ந்து உணவு உண்டதுண்டா?

மனிதன் :— உட்கார்ந்து உணவு உண்டதில்லை.

ஜிப்ராயீல் :— ஏ! மனிதனே! நீ உலமாக்கள் வசித்த ஊரிலாவது வசித்திருக்கிறாயா?

மனிதன் :— வசித்ததில்லை.

ஜிப்ராயீல் :— ஏ! மனிதனே! நீ உலமாக்கள் குடியிருந்த தெருவிலாவது குடியிருந்திருக்கிறாயா?

மனிதன் :— குடியிருந்ததில்லை.

ஜிப்ராயீல் :— ஏ! மனிதனே! நீ உலமாக்களை நேசித்திருக்கிறாயா?

மனிதன் :— நேசித்ததில்லை.

ஜிப்ராயீல் :— ஏ! மனிதனே? நீ உலமாக்களை நேசித்தவரையாவது நேசித்திருக்கிறாயா?

மனிதன் :— ஆம் நேசித்திருக்கிறேன்.

இதையறிந்த இறைவன் ஏ! ஜிப்ராயீலே! இம்மனிதன் உலமாக்களை நேசித்த மனிதனை நேசித்த காரணத்

நால் இவனை நான் மன்னித்துவிட்டேன். ஆகையால் இம்மனிதனை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வீராக என்று கூறுவான. மறுமையில் முதலில் நபிமார்கள் பிறகு உலமாக்கள், அதன் பின் ஷுஹதாக்கள் ஆகிய மூவகையினரும் தாம் தாம் நாடியவர்களுக்கு ஷபாஅத் (சிபாரிசு) செய்வார்கள் என்று ஹதீதிலே கூறப்பட்டிருக்கிறது. இதன்படி உலமாக்களின் ஷபாஅத்தால் இம்மனிதனும் மன்னிப்புப் பெற்று சொர்க்கம் புகுதுவான் என்று தெரிகிறது. (தகாயிக்குல் அக்பார்)

பெரும் பாவமான காரியங்கள்.

1. வல்லமையிலும், திறமையிலும், அறிவிலும் இறைவனுக்கு இணை வைப்பது. 2. இறைவனுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைப் பிறருக்குச் செய்வது. 3. இறைவன் மீதல்லாமல் பிறர் மீது நேர்ச்சை செய்வது. 4. ஏதாவது கஷ்டம் நஷ்டம் நிகழ்ந்தால் அவ்லியாக்கள் முதலிய நல்லோர்களை அழைத்து நிவர்த்தி தேடுவது. 5. இன்ன பெரியார் நான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அறிகிறார் என்றும் நான் நினைக்கும் போது என் முன் தோன்றுகிறார் என்றும் நம்புவது. 6. கள், கஞ்சா அபினி, ஒஸ்கி, பிராந்தி, சாராயம் முதலிய போதை வஸ்துக்களை உபயோகிப்பது, பிறரையும் உபயோகிக்கச் செய்வது. 7. எதிரிகள் குறைவாக இருக்கும் போது போர்க்களத்திலே புறமுதுகு காட்டி ஓடுவது. 8. மாந்திரீகம் செய்வது பிறரையும் செய்ய வைப்பது. 9. அனாதைகளின் சொத்துக்களை அநீதமாக அநுபவிப்பது.

10. மக்காவுக்குள் செய்யக் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்வது. 11. வட்டி வாங்குவது, கொள்ளையடிப்பது, பன்றியின் மாமிசத்தை புசிப்பது. 12. பொய்ச் சாட்சி சொல்வது. 13. எந்த விதக் காரணமுமின்றி தெரிந்த விஷயத்திற்குச் சாட்சி சொல்ல மறுப்பது. 14. மார்க்கம் அநுமதித்துள்ள காரணங்கள் இல்லாமல், ரமளான் மாதத்தின் பகல் காலங்களில் உண்பது, குடிப்பது. 15. பந்துமித்திரர்களைப் பகைத்து பிரித்து வைப்பது. 16. எப்பொழுதாவது தொழுகையைப் பிற்படுத்தியே தொழுவது. 17. அளவிலும் நிறுவையிலும் குளறுபடி செய்வது. அதாவது தான் பிறரிடம் வாங்கும் போது நிறைய அளந்து, நிறுத்து வாங்குவது. பிறருக்குத் தான் கொடுக்கும் போது குறைவாக அளந்து, நிறுத்துக் கொடுப்பது. 18. அக்கிரமமாக அன்னியரின் பொருள்களை அநுபவிப்பது 19. ஜக்காத் தன் மீது கடமையாக இருந்தும் அதை நிறைவேற்றாமலிருப்பது. 20. ஹஜ்ஜு தன் மீது கடமையாக இருந்தும் அதை செய்யாமலிருப்பது 21. பொய்ச் சத்தியம் செய்வது. 22. அல்லாஹ்வையும், ரசூலையும், ரசூல் (ஸல்) அவர்களின் மனைவிமார்களையும் ஸஹாபாக்களையும் இழிவாக எண்ணுவது அல்லது திட்டிப்பேசுவது, சபிப்பது. 23. கைலஞ்சம் வாங்குவது 24. நன்மையை ஏவவும், தீமையைத் தடுக்கவும் சக்தி பெற்றிருந்தும், அதைச் செய்யாமல் ஒதுங்கியிருப்பது. 25. தற்கொலை செய்வது, அல்லது தனது அவயவங்களில் ஒன்றைத் துண்டிப்பது. 26. வாக்குறுதியை

நிறைவேற்ற சக்தியிருந்தும் அதை நிறைவேற்றாமலிருப்பது. 27. நல்ல காரியங்களைத் தடுத்து, தீய காரியங்களைத் தூண்டுவது. 28. உலமாக்களை இழிவாகவும், தாழ்த்தியும் பேசுவது 29. குர்ஆன் ஷரீபை மனனம் செய்து அதை மறந்து விடுவது. 30. உயிர்ப் பிராணிகளை நெருப்பில் போட்டுக் கொல்லுவது. 31 எவ்விதக் காரணமுமின்றி ஒரு பெண் தன் புருஷனுடன் இணங்காமலிருப்பது. 32. ஒரு புருஷன் தன் பெண் ஜாதியை காரணமின்றித் துன்புறுத்துவது. 33. அல்லாஹ்வுடைய மன்னிப்பின் மீது நம்பிக்கை கொள்ளாமலும். அவனின் தண்டனையைப் பயப்படாமலும் இருப்பது. 34. சீட்டு முதலான சூதாட்டங்கள் ஆடுவது. 35. வீணான காரியங்களில் பொருளைச் செலவிடுவது. 36. அல்லாஹ் அல்லாதவர்களின் பேரால் பிராணிகளை அறுத்துப் பலியிடுவது. 37. பெருமையாகவும் பிறரைக் காணத் தன்னை உயர்வாகவும் எண்ணுவது. 38. பொறாமை, கோபம், அகம்பாவம், குரோதம் கொள்வது. 39. சூழ்ச்சி வஞ்சனை, சதிமோசம், ஏமாற்றுதல் முதலான கெட்ட எண்ணங்கள் கொள்வது. 40. காபிர்கள், பெரும்பாவிகள் அனுச்சார அனுஷ்டானி முதலானவர்களையே தன் உற்ற நேயராகக் கொள்வது. 41. தொழுகை, நோன்பு முதலான மார்க்கக் கடமைகள் மீது வெறுப்புக் கொண்டு அவைகளை நிறைவேற்றாமல் அலட்சியமாக இருப்பது. 42. ஹலாலான (ஆகுமான) வைகளை ஹறாம் (ஆகாதது) எனவும், ஹறாம் (ஆகாத) வைகளை ஹலால் (ஆகுமானது) எனவும் கருதுவது. 43. தீனுடைய வேலைகளில் குற்றங்

10. மக்காவுக்குள் செய்யக் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்வது. 11. வட்டி வாங்குவது, கொள்ளையடிப்பது, பன்றியின் மாமிசத்தை புசிப்பது. 12. பொய்ச் சாட்சி சொல்வது. 13. எவ்விதக் காரணமுமின்றி தெரிந்த விஷயத்திற்குச் சாட்சி சொல்ல மறுப்பது. 14. மார்க்கம் அனுமதித்துள்ள காரணங்கள் இல்லாமல், ரமழான் மாதத்தின் பகல் காலங்களில் உண்பது, குடிப்பது. 15. பந்துமித்திரர்களை பகைத்து பிரித்து வைப்பது. 16. எப்பொழுதும் தொழுகையைப் பிற்படுத்தியே தொழுவது. 17. அளவிலும் நிறுவையிலும் குறைவு செய்வது. அதாவது தான் பிறரிடம் வாங்கும் போது நிறைய அளந்து, நிறுத்து வாங்குவது, பிறருக்குத் தான் கொடுக்கும் போது குறைவாக அளந்து, நிறுத்துக் கொடுப்பது. 18. அக்கிரமமாக அன்னியரின் பொருள்களை அனுபவிப்பது. 19. ஜக்காத் தன் மீது கடமையாக இருந்தும் அதை நிறைவேற்றாமலிருப்பது. 20. ஹஜ்ஜு தன் மீது கடமையாக இருந்தும் அதை செய்யாமலிருப்பது. 21. பொய்ச் சத்தியம் செய்வது. 22. அல்லாஹ்வையும், ரசூலையும், ரசூல் (ஸல்) அவர்களின் மனைவிமார்களையும் ஸஹாபாக்களையும் இழிவாக எண்ணுவது அல்லது தீங்காகப்பேசுவது, சபிப்பது. 23. கைலஞ்சம் வாங்குவது. 24. நன்மையை ஏவவும், தீமையைத் தடுக்கவும் சக்தி பெற்றிருந்தும், அதைச் செய்யாமல் ஒதுங்கியிருப்பது. 25. தற்கொலை செய்வது, அல்லது தனது அவயவங்களில் ஒன்றைத் துண்டிப்பது. 26. வாக்குறுதியை

நிறைவேற்ற சக்தியிருந்தும் அதை நிறைவேற்றாமலிருப்பது. 27. நல்ல காரியங்களைத் தடுத்து, தீய காரியங்களைத் தூண்டுவது. 28. உலமாக்களை இழிவாகவும், தாழ்த்தியும் பேசுவது 29. குர்ஆன் ஷரீபை மனனம் செய்து அதை மறந்து விடுவது. 30. உயிர்ப் பிராணிகளை நெருப்பில் போட்டுக் கொல்லுவது. 31 எவ்விதக் காரணமுமின்றி ஒரு பெண் தன் புருஷனுடன் இணங்காமலிருப்பது. 32. ஒரு புருஷன் தன் பெண்ஜாதியை காரணமின்றித் துன்புறுத்துவது. 33. அல்லாஹ்வுடைய மன்னிப்பின் மீது நம்பிக்கை கொள்ளாமலும், அவனின் தண்டனையைப் பயப்படாமலும் இருப்பது. 34. சீட்டு முதலான சூதாட்டங்கள் ஆடுவது. 35. வீணான காரியங்களில் பொருளைச் செலவிடுவது. 36. அல்லாஹ் அல்லாதவர்களின் பேரால் பிராணிகளை அறுத்துப் பலியிடுவது. 37. பெருமையாகவும் பிறரைக் காணாத் தன்னை உயர்வாகவும் எண்ணுவது. 38. பொறாமை, கோபம், அகம்பாவம், குரோதம் கொள்வது. 39. சூழ்ச்சி வஞ்சனை, சதிமோசம், ஏமாற்றுதல் முதலான கெட்ட எண்ணங்கள் கொள்வது. 40. காபிர்கள், பெரும்பாவிகள் அனாச்சார அனுஷ்டானி முதலானவர்களையே தன் உற்ற நேயராகக் கொள்வது. 41. தொழுகை, நோன்பு முதலான மார்க்கக் கடமைகள் மீது வெறுப்புக் கொண்டு அவைகளை நிறைவேற்றாமல் அலட்சியமாக இருப்பது. 42. ஹலாலான (ஆகுமான) வைகளை ஹறாம் (ஆகாதது) எனவும், ஹறாம் (ஆகாத) வைகளை ஹலால் (ஆகுமானது) எனவும் கருதுவது. 43. தீனுடைய வேலைகளில் குற்றங்

குறைகளை ஏற்படுத்தி அதை செயல்பட விடாமல் இடையூறு செய்வது. 44. பர்லு, வாஜிபான கடமைகளை அறிந்திருந்தும் அவைகளைப் பிறருக்குச் சொல்லாமல் மறைத்து வைப்பது. 45. பள்ளிவாசல்களை அசுத்தம் செய்வது. சுத்தமில்லாமல் தொழுவது 46. பயப்பட வேண்டிய அவசியமில்லாமலிருக்கும் போது காபிர்கள், அநாச்சார அனுஷ்டானிகளுக்கு கண்ணியமும், மரியாதையும் செய்வது. 47. அறிவும், திறமையும் இல்லாமல் மார்க்க பத்வா (தீர்ப்பு) அளிப்பது. 48 தனது அறிவுப்படி குர்ஆன் ஷரீபுக்கு வியாக்கியானம் செய்வது. 49. நல்லோர்களை (ஸாலிஹீன்) இழிவாக எண்ணுவது. 50. ஒருவரைப் பற்றி புறம் பேசுவது, அல்லது அவருக்கு எதிரிலேயே அவரை குறைவாகப் பேசுவது. 51. முஸ்லிம்களின் மீது கெட்ட சந்தேகங் கொள்வது. 52. அல்லாஹ் அல்லாதவைகளின் மீது சத்தியம் செய்வது. 53. குர்ஆன் ஷரீப் ஓதப்படும் இடத்திலிருந்து கொண்டு அதைக் கேளாமல் வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்பது. 54. குறிகாரர்களிடம் குறிபார்த்து அதை நம்புவது. 55. மறைவான விஷயங்களை அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களும் அறிகிறார்கள் என்று நம்புவது. 56. நபிமார்கள் மீது அல்லது மலக்குகள் வேதங்கள், நரகம், சொர்க்கம், நன்மை தீமைகள் நிறுக்கும் தராசு, சிறுத்துல் முஸ்தக்கீம் பாலம், கப்ருடைய வேதனை, மறுமையில் நிகழவிருக்கும் சம்பவங்கள் முதலியவைகளில் எதிலேனும் சந்தேகம் கொள்வது. 57. தாடியைச் சிரைப்பது, மீசையை வளர்ப்பது, தங்கம் வெள்ளிப் பாத்திரங்களில் உண்பது, குடிப்பது. 58. ஆண்கள் பட்டாடை அணிவது,

தங்கம், வெள்ளி முலாம் பூசிய பாதரட்சையை அணிவது. 59. ஆண்கள் கை கால்களிலும், பற்களிலும் சாயம் பூசிக் கொள்வது. 60. டோலக், மிருதங்கம், வீணை, பக்கவாத்தியம், மேளதாளம் அடிப்பது, அதைச் செய்வோரைப் பாராட்டிப் பரிசு கொடுப்பது, டான்ஸ் முதலியவைகளைப் பார்ப்பது, அவர்களுக்கு அனுமதியளிப்புக் கொடுப்பது. 61 ஹறாமா (விலக்கா)ன காரியங்களைச் செய்யும்போது பிஸ்மில்லாஹ் சொல்லுவது. 62. பொய்யான காரியங்களில் அல்லாஹ்வை சாட்சியாக்குவது. 63. இஸ்லாம் அல்லாத மார்க்கங்களைப் போற்றிப் புகழ்ந்து அதற்கொப்ப நடப்பது. 64. காபிர்கள் பூஜை செய்த பொருள்களை விசேஷம் எனக் கருதி தின்பது. 65. ஒரு நபியின் பேராலோ, அவ்லியாக்களின் பேராலோ வேறு எதன் பேராலோ சடைமுடி வளர்ப்பது 66. வேலையாட்களை அவர்களின் சக்திக்கு அதிகமாக வேலை வாங்குவது. 67. பெரியோர்களை மரியாதையின்றி பெயர் சொல்லி அழைப்பது. 68. இரவு பகல் எந்நேரமும் நல்ல உணவு உடைகளைத் தயாரிப்பதிலேயே சிந்தனையைச் செலுத்துவது 69. சக்தியிருந்தும் பெற்றோருக்கும் பந்துக்களுக்கும் பணிவிடை செய்யாமலிருப்பது 70. தனது ஆசிரியர், பெரியார்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்வது. 71. மார்க்கத்தின் கடமையான காரியங்களைச் செய்ய சக்தியிருந்தும் அவைகளை நிறைவேற்றாமலிருப்பது. 72. இறைவனால் கொடுக்கப்பட்ட பாக்கியங்களில் கஞ்சத்தனம் செய்வது. 73. தன் மனைவி மாதவிடாய், பிள்ளைப் பேற்றுத் தொடக்குள்ளவளாயிருந்தும் அவளைச் சேர்க்கை செய்வது.

74. மார்க்கத்திற்கு மாறான காரியங்களில் மனைவிக்கு வழிபட்டு நடப்பது. 75. அவசியமில்லாமல் தன் மனைவியை அங்குமிங்கும் வெளியில் செல்ல அனுமதிப்பது 76. வசதியிருந்தும் தன் மனைவி மக்களுக்கு உணவு முதலியவை கொடாமல் கஷ்டப்படுத்துவது. 77. பல மனைவி உள்ளவர் அவர்களுக்கிடையில் நீதியில்லாமல் நடந்து கொள்வது. 78. அன்னியப் பெண்களை ஆசை கொண்டு நோக்குவது. 79. மனைவி மக்கள் விஷயத்தில் அல்லாஹ் ரசூலுடைய கட்டளைக்கு மாற்றமாக நடந்து கொள்வது. 80. ஒரு பெண் தன் புருஷனை மதிக்காமலும், அவன் கொடுத்த பொருள்களை அற்பமாக எண்ணும் கருதுவது. 81. பெண்கள் ஆண்கள் போன்றும் ஆண்கள் பெண்கள் போன்றும் வேஷம் தரிப்பது. 82 ஒரு பெண் தன் புருஷனின் அனுமதியின்றி வெளியில் செல்வது 83. ஒருவரின் வீட்டில் அவரின் அனுமதியின்றி பிரவேசிப்பது. 84. ஒரு பெண் தன் புருஷனின் சக்திக்கு அதிகமாக உணவு உடை கேட்டுத் துன்புறுத்துவது. 85. கூலிக்காரர்களிடம் வேலை வாங்கிக் கொண்டு அவர்களின் கூலியை மோசம் செய்வது. 86. பிறருடைய முகஸ்துதிக்காக நற்கிரியை புரிவது. 87. தனது பக்தி வழிபாடுகளைப் பற்றி பெருமிதம் கொள்வது. 88. மக்கள் பஞ்சத்தால் கஷ்டப்படும்போது உணவுப் பொருள்களை விலை ஏறட்டும் என தேக்கி வைத்துக் கொள்வது. 89. ஈதுகாஹ்விற்காகவோ அல்லது ஏதாவது சருக்காகவோ, பிராணிகளை அறுத்துப் பலியிடுவது. 90. கப்ருக்குசஜ்தா செய்வது அல்லது அதைச் சுற்றுவது, 91. ஒரு முஸ்லிமுடன்

107. போதையுள்ள பொருள்களை விற்பனை செய்து சம்பாத்தியம் செய்வது. 108. பிராணிகளைப் புணருவது 109. இத்தாவிலிருக்கும் ஒரு பெண்ணை நிக்காஹ் செய்வது. 110. சுயேச்சையான பெண்ணையோ, ஆணையோ விற்பனை செய்வது. 111. ஜும்ஆ தொழுகையின் நேரத்திலே வியாபாரம் செய்வது. 112. இறைவன் விதித்துள்ள தண்டனைகளில் இரக்கம் காட்டி சிபாரிஷ் செய்வது. 113. வேண்டுமென்றே குர்ஆன் ஷரீபைத் தவறாக ஓதுவது. 114. ஒருவர் சொல்லும் சலாமுக்கு ஜவாப் சொல்லாமலிருப்பது. 115. நஞ்சு குடித்து அல்லது நீரில் மூழ்கி மரணிப்பது. 116. மார்க்கத்தின் வேலைகளில் சிரிப்பது, பரிகசிப்பது. 117. பொதுப் பாதைகளில் இடஞ்சல் செய்வது. 118. தானியம், உப்பு, சீனி முதலியவைகளில் எடை அதிகமாகுவதற்காக வேறு வஸ்துக்களைக் கலப்படம் செய்வது. 119. தனது பொருளின் குற்றங் குறைகளை அறிந்திருந்தும் அதை வெளிப்படுத்தாமல் விற்று விடுவது. 120 ஒரு முஸ்லிமை நரகவாதி என்றும், காபிரென்றும் கூறுவது. 121 பாவம் அறியாப் பத்தினிப் பெண்கள் மீது விபச்சாரப் பழி சுமத்துவது. 122. பொய், புறம், கெட்ட பேச்சுக்களைப் பேசுவது, 123. உரிமையும், அவசியமும் இல்லாமல் ஒரு உயிரைக் கொல்லுவது. இன்னும் இவைகள் போன்று பாவத்தை விளைவிக்கும் பாதகச் செயல்கள் அநேகமிருக்கின்றன. அவைகளை ஆய்ந்தறிந்து தவிர்ந்து கொள்வது மிக மிக அவசியமாகும்.

(முன் தஹல்மவாயிஜ்)

மாதூய எண்ணத்தின் மாபெரும் சக்தி!

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாக அப்துல்லாஹிபின் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :-

உங்களுக்கு முன் வாழ்ந்த சமூகத்தவரில் மூவர் ஒரு நாள் மலைப்பக்கமுள்ள ஒரு வழியே சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென (மின்னல் வெட்டி இடி இடித்து) மழை பொழிய ஆரம்பித்தது. அப்போது அம்மூவரும் அருகிலிருந்த ஒரு மலையின் குகைக்குள் நுழைந்தனர். காற்றும மழையும் அதிகமாக இருந்தமையால் அந்த மலையின் உச்சததிலிருநத ஒரு பெரும் பாறாங்கல் உருண்டோடி வந்து அக்குகையின் வாயிலை அடைத்துக் கொண்டது. அக்கல்லை அகற்ற அவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அப்போது அவர்கள் நீங்கள் மாதூய எண்ணததோடு இறைவனுக்கென்றே செய்த நற்கிரியைகளின் மூலம்தான் இககல்லை அகற்ற முடியும் என்று ஒன்றுக்கொன்று கூறிக கொண்டார்கள். அதன் படி அவர்கள் தாம் தாம் செய்த நற்கிரியைகளை எடுத்துக் காட்டி இறைவனிடம் பிரார்த்திக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களில் ஒருவர், இறைவா! எனது பெற்றோர்கள் வயோதிகர்களாக இருந்தார்கள். எனக்கு சிறு குழந்தைகளும் இருந்தார்கள். அவர்களைப் பராமரிப்பதற்காக எனது ஆடுகளைக் காலையில் காட்டுக்கு ஓட்டிச் சென்று மேய்த்து, மாலையில் வீட்டுக்கு ஓட்டி வந்து, பால் கறந்து முதலில் எனது பெற்றோர்களுக்குப் புகட்டி பின்புதான்

என் குழந்தைகளுக்குப் புகட்டுவது என் வழக்கமாக இருந்து வந்தது. ஒரு நாள் ஆடுகளுக்குக்கொழைகள் பறித்துக் கொடுக்க மரங்களைத் தேடித் தேடி அலைந்து வெகு தூரம் சென்று விட்டேன். அதனால் மாலை வெகு நேரம் சென்று வீடு திரும்பினேன். வழமைப்படி பால் கறந்து பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு என் பெற்றோருக்குப் புகட்டச் சென்றேன். ஆனால் அவர்கள் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை எழுப்பி தூக்கத்தைக் கெடுக்க நான் விரும்பவில்லை. அதனால் பால் பாத்திரத்தை கையில் வைத்தபடி அவர்களின் தலைமாட்டில் நின்று வண்ணம் அவர்கள் விழிப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்களுக்குப் புகட்டாமல் என் குழந்தைகளுக்குப் புகட்ட விரும்பவில்லை. குழந்தைகளெல்லாம் பசி தாங்காமல் என்னைச் சுற்றிக் கதறி அழுது கொண்டிருந்தார்கள். அதிகாலை ஆனதும் இருவரும் விழித்தெழுந்தார்கள் முதலில் அவர்களுக்குப் பாலைப் புகட்டி விட்டு பின்பு என் குழந்தைகளுக்கும் புகட்டினேன். இறைவா! அவ்வாறு நான் என் பெற்றோருக்குச் செய்த பணிவிடை உன் திருப்தியையும் பொருத்தத்தையும் நாடியே தான் என்பது உனக்குத் தெரியும். ஆகையால் உனது கிருபை கொண்டு இப்பாறாங்கல்லை அகற்றி எங்களைக் காப்பாற்றி யருள்வாயாக என்று பிரார்த்தித்தார். அப்போது அப்பாறாங்கல் அவர்கள் வெளியேற முடியாத அளவு கொஞ்சம் அகன்றது.

மற்றொருவர், இறைவா! எனது சிறிய தந்தைக்கு அழகிய மகள் ஒருவள் இருந்தாள். அவளை யாவற்றைக்

காணவும் நான் மிகவும் நேசித்தேன். ஒரு நாள் அவளை என் இச்சைக்கு இசையும்படி அழைத்தேன். ஆனால் அவள் மறுத்து விட்டாள். சில வருஷங்களுக்குப் பிறகு பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அவள் என்னிடம் வந்து உதவி தேடினாள். என் இச்சைக்கு நீ இசைந்தால் உனக்கு நான் உதவிசெய்கிறேன் என்று கூறினேன் அவளும் ஒப்பினாள் அவளுக்கு 120 தங்கக் காசுகள் கொடுத்து என் இச்சையைப் பூர்த்தி செய்ய அவளின் இரு கால்களுக்குமிடையில் உட்கார்ந்தேன். அப்போது அவள் அல்லாஹ்வின அடியானே! அல்லாஹ்வைப் பயந்து கொள். உரிமையின்றி என் கன்னிப்பருவத்தைக் களங்கப்படுத்தி விடாதே என்று கூறினாள். அல்லாஹ் என்ற நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் நடு நடுங்கி கொடுத்த தங்கக் காசுகளையும வாங்காமல் (துற்செயலை விட்டும்) எழுந்து வந்து விட்டேன். இறைவா! உன் கோபத்தையும் தண்டனையையும் பயந்து தான் அவ்வாறு என் இச்சையைக்கூட நிறைவேற்றாமல் அத்தீய செயலை விட்டும் விலகினேன் என்பது உனக்குத் தெரியும் எனவே உனது கிருபை கொண்டு இப்பாறங்கல்லை அகற்றி அருள் புரிவாயாக என்று பிரார்த்தனை புரிந்தார். உடனே அக்கல் கொஞ்சம் அகன்றது. ஆயினும் வெளியேற முடியாது.

இன்னொருவர், இறைவா! நான் எனது தொழிற்சாலையில் பல வேலையாட்களிடம் வேலை வாங்கினேன். எல்லோருடைய கூலியையும் கொடுத்து விட்டேன். ஆனால் ஒருவர் மட்டும் தனது கூலியை வாங்காமல் சென்று விட்டார். நான் அவரின் கூலியை எனது

வியாபாரத்தில் சேர்த்துப் பெருக்கி விருத்தி செய்து பல ஒட்டகங்களையும், ஆடு மாடுகளையும், அவைகளை மேய்ப்பதற்குப் பல அடிமைகளையும் சேகரம் செய்து வைத்திருந்தேன். பல வருஷங்களுக்குப்பின் ஒரு நாள் அந்த வேலைக்காரர் என்னிடம் வந்து அல்லாஹ்வின் அடியாரே! எனக்குத் துரோகம் செய்யாமல் அல்லாஹ்வைப் பயந்து எனக்குச் சேர வேண்டிய கூலியைக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டார். அப்பொழுது நான் இதோ இந்த ஒட்டகங்கள், ஆடு மாடுகள், இந்த அடிமைகள் எல்லாம் உன் கூலியின் மூலம் பெருகியவைகளாகும். ஆதலால் அனைத்தையும் ஒப்புக்கொள் என்று கூறினேன். அதற்கவர் என்னைப் பரிகாசமா செய்கிறீர்? என்று கேட்டார். இல்லை உம்மைப் பரிகாசம் செய்யவில்லை. இவைகள் எல்லாம் உனது உடைமைகள்தான் இதில் பொய்யொன்றுமில்லை என்று நான் கூறினேன். அதன்படி அவர் அனைத்தையும் ஒப்புக்கொண்டார். இறைவா! அந்தக் கூலிக்காரரின் கூலியை அபகரிக்காமல் அதைப் பெருகச்செய்து பாதுகாத்து வைத்திருந்து அவ்வேலைக்காரரிடம் ஒப்படைத்தது உன்னைப் பயந்தும், உன் திருப்தியை நாடியுமேதான் என்பது உனக்குத் தெரியும். ஆகையால் உனது கிருபை கொண்டு இப்பாறைகளை அகற்றி எங்களைக் காப்பாற்றுவாயாக என்று பிரார்த்தனை செய்தார். உடனே இறைவன் அப்பாறைகளைப் பூரணமாக அகற்றிக் காப்பாற்றினான். அவர்கள் வெளியேறி தங்கள் இல்லம் ஏகினார்கள். அவர்களால் அசைக்க முடியாத அப்பாறைகளை அவர்களின் மாதுரிய எண்ணத்தின் சக்தி அசைத்து விட்டது என்பதை இச்சம்பவம் துலக்குகிறது. என்னே மாதுரிய

எண்ணத்தின் மாபெரும் சக்தி !

(ரியாளுஸ்ஸாலிஹீன்)

ஆபத்துக்கள் இறங்கி விடும்.

எனது உம்மத்தோர்கள் பதினைந்து வகையான காரியங்களைச் செய்வார்களானால் அவர்கள் மீது பற்பல ஆபத்துகளும், முஸீபத்துகளும் இறங்கி விடுமென நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்:

1. அமானத் பொருள்களைக் கொள்ளைப் பொருள்களாகப் பாவித்து அதற்குரியவரிடம் கொடாமல் வைத்துக் கொள்வது. 2. ஜக்காத் கொடாமல் தன் நிதி கடனுகளே வைத்துக் கொள்வது. 3. ஆடவர்கள் பெண்களுக்கு வழிப்பட்டு நடப்பது. 4. பெற்றோர் சொல் கேளாமல் மாறுபட்டு நடப்பது. 5. பள்ளிகளில் உலக விவகாரங்களைப் பேசுவது, கூச்சலிட்டுப் பேசுவது. 6. தாழ்ந்த, மிக அற்பமானவன் மக்களுக்குத் தலைவனாக இருப்பது. 7. மறைமுகமாக அருந்துவதும் கூட விலசகான மதுவைப் பகிரங்கமாக அருந்துவது. 8. ஒருவனுக்கு அவனின் அக்ரமத்தைப் பயந்து சங்கை செய்வது. 9. விலக்கப்பட்ட பட்டுப்பட்டாடைகளை ஆண்கள் அணிவது. 10. பெற்றோர்களை நோவினை செய்வது. 11. சங்கீதக்கருவிகளைத் தயார் செய்து அதைப்பரப்புவது 12. உற்ற நேயர்களைக் கண்ணியப் படுத்தாமலிருப்பது. 13. டோலக், மிருதங்கம், ஆர்மோனியம், மேளதாளம் அடிப்பது. 14. விலக்கப்பட்ட விபச்சாரத்தை விரும்பிச் செய்வது. 15. பின்னோர்கள் முன்னோர்களை ஏசுவது.

அல்லாஹ்வின் அர்ஷு நிழலை அடைவோர்.

1. நீதி நேர்மையோடு ஆட்சி புரியும் அரசன் 2. வல்லோனின் வணக்கத்திலே வளர்ந்தோங்கிய வாலிபன். 3. தனித்திருந்து, தனியோனை நினைந்துருகி அழுதவர். 4. பள்ளியை விட்டு வெளியே சென்ற பின் அதன் பக்கமே தனது இதயத்தை இணைந்ததாக்கிக் கொண்டவர். 5. தனது இடது கரம் அறியாவண்ணம் வலது கரத்தால் தர்மம் செய்தவர். 6. இறைவனுக்கென்றே ஒன்றுக்கொன்று நேசங்கொண்ட இருவர். 7. அழகிய மங்கையொருவள் தனது இச்சையைப் பூர்த்தி செய்ய அழைத்தபோது அல்லாஹ்வை அஞ்சி விலகிக் கொண்டவர் 8. குளிர் காலத்திலும் தொழுகைக்காக குளிர்ந்த தண்ணீரில் ஒளுச் செய்கிறவர். 9. கடினமான சூழும் இருட்டையும் பொருட்படுத்தாமல் தொழுகைக்காகப் பள்ளிக்குச் செல்கிறவர். 10. பசித்தோருக்கு ஆகாரம் கொடுத்துப் பசியாற்றுகிறவர். 11. தனது இஸ்லாமிய சோதரனுக்கு நிகழ்ந்த கஷ்ட நஷ்டங்களை அகற்றியவர். 12. சொல்லிலும் செயலிலும் திருநபி (ஸல்) அவர்களின் சுன்னத்தைக் கடைபிடித்து நடந்தொழுகியவர். 13. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் சொல்கிறவர். 14. கடனாளிக்கு அவகாசம் அளித்தவர், அல்லது கடனை வாங்காமல் மன்னித்தவர். 15. இறைவனின் பொருத்தத்தை நாடி ஐ வேளையும் பாங்கு சொல்லும் முஅத்தின் (மோதினார்) 16. ஜிஹாதுக்குச் செல்வோருக்கு உதவி செய்கிறவர். 17. குர்ஆன் ஷரீபை மனனம் செய்து அதன் போதனைப்படி நடப்பவர்.

18. திருமக்கா நகர் சென்று ஹஜ்ஜு செய்த ஹாஜிகள். 19. பந்துமித்திரர்களைச் சேர்த்து வாழ்கிறவர். 20. அநாதைகளையும், விதவைகளையும் ஆதரிப்பவர். 21. பசி தாங்காமல் பட்டினியால் மரணித்தவர். 22. கவலை உடையோரின் கவலையை நீக்கியவர். 23. நன்மைகளை ஏவி, தீமைகளைத் தடுப்பவர். 24. நண்பர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்கிறவர். 25. தன் புருஷன் இறந்தபின், தன் பிள்ளைகளை வளர்ப்பதற்காக பொறுமையுடன் கஷ்டங்களை அனுபவிக்கும் விதவை. 26. அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்கிறவர், 27. தனது பொருளின் உண்மை நிலையைக் கூறி விற்பனை செய்யும் வியாபாரி. 28. நற்குணமும், நல்லொழுக்கமும் உடையவர்கள். 29. தனக்கு விருப்பம் உள்ளதையே பிறருக்கும் விரும்புகிறவர். 30. இறைவனின் சிருஷ்டிகளுக்கு நன்மையே செய்கிறவர். 31. இறைவனின் அச்சத்தால் உருகி, உருகி மெலிந்தவர் 32. இறைவனால் விலக்கப்பட்டவைகளை விட்டும் தனது கண்களைப் பாதுகாத்துக் கொண்டவர். 33. எவரின் இழிச் சொல்லையும், பழிப்பையும் பாராமல் தீனுக்கு ஊழியம் செய்கிறவர். 34, வட்டி, இலஞ்சத்தின் பொருள்களை உண்ணாதவர், 35. தொழுகைக்காகவும் திக்ருக்காகவும் நேரங்களை கணித்து அதன்படி நடக்கிறவர் 36. முஸ்லிம்களின் சிறு குழந்தைகள். 37. வியாதியஸ்தர்களிடம் சென்று க்ஷேமம் விசாரிப்பவர். 38. ஜனாஸாவுடன் சென்று அடக்கம் செய்யும் வரை கூடவே இருப்பவர். 39. அகமும், புறமும் பரிசுத்தத்தோடு இறைவனுக்கென்றே நேசம் கொள்கிறவர்.

41. கபிலாவிலும், பர்ளாயிலும் இறைவனுக்கென்றே நோன்பு நோற்பவர். 41. இதயத்தாலும், நாவாலும் இறைவனைத் தியானம் செய்து கொண்டிருப்பவர். 42. விலக்கப்பட்ட சகல காரியங்களை விட்டும் விலகி, பள்ளிக்குரிய காரியங்களில் ஈடுபட்டு, பஜ்ருடைய நேரத்தில் இறைவனிடம் பிழை பொறுக்கத் தேடுகிறவர். 43. எவரைப் பற்றியும் கோள் சொல்லாமலும், பொறாமை கொள்ளாமலும் இருப்பவர். 44. பெற்றோர் சொல் பேணி பணிவிடை செய்து அவர்களின் பிரார்த்தனையைப் பெற்றவர். 45. குர்ஆன் ஷரீபைத் திருத்தமாகக் கற்றுக் கொடுப்பவர், 46. எப்போதும் தீனுடைய வேலையிலேயே ஈடுபட்டு, தீனின் பேச்சையே பேசுகிறவர். 47. "லாயிலாஹ இல்லல்லாஹு" என்னும் கலிமாவைச் சதா சொல்லிக் கொண்டிருப்பவர். 48. ஒவ்வொரு மூச்சிலும், பேச்சிலும், செயலிலும் இறைவனை அஞ்சி நடப்பவர். 49. இறைவனின் பாதையிலே போர் புரிந்து உயிர் நீத்த (ஷுஹதா) வீர தியாகிகள். 50. இறைவனுக்காகவும், ஈமானைப் பாதுகாப்பதற்காகவும், (ஹிஜ்ரத்) சுயபதியை விட்டும் அயல்பதி செல்கிறவர். இவர்கள் எல்லாம் மறுமையில், அல்லாஹ்வின் அர்ஷுடைய நிழலிலிருப்பார்கள். (முன்தஹல்மவாயிஜ்)

ஒவ்வொரு மூச்சுக்கும் இரு கேள்விகள் உண்டு.

இரவும், பகலும் சேர்ந்து 24 மணி நேரங்கள் ஆகின்றன. ஒவ்வொரு மனிதனும் 1 மணிக்கு 180 தடவை மூச்சு விட்டு, மூச்சு வாங்குகின்றான். இதன்படி 24 மணி நேரத்திலும் 4320 தடவைகள் மூச்சு விட்டு மூச்சு வாங்குகிறான்

ஒவ்வொரு மூச்சுக்கும் இரண்டு கேள்விகள் கேள்க் கப்படுவான். அதாவது மூச்சு விடும்போது என்ன காரியம் செய்து கொண்டிருந்தான். மூச்சு வாங்கும் போது என்ன காரியம் செய்து கொண்டிருந்தான் என்று கேள்க்கப்படு வான். ஆகையால் நமது ஒவ்வொரு பேச்சையும் மூச்சை யும் வீணிலே கழிக்காமல் தீனிலேயும், தியானத்திலேயும் கழிப்பது மிக்க அவசியமாகும். அதாவது தீனின் விஷயங் களைப் பேசுவதிலும், அவைகளைப் பிறருக்கு எடுத்துரைப் பதிலும், திருமறையை ஓதுவதிலும், திக்ரு செய்வதிலும் நல்ல பேச்சுக்களைப் பேசுவதிலும், அவைகளைப் பிறருக்குச் சொல்வதிலும், தீய காரியங்களைத் தடுப்பதிலும் நமது மூச்சையும், பேச்சையும் கழிக்க வேண்டும். வீணான விஷ யங்களில் மூச்சைக் கழிப்பதால் பற்பல ஆபத்துக்கள் விளைகின்றன. ஏனெனில் எவர் வீணான விஷயங்களை அதிகம் பேசுகிறாரோ அவருக்குப் பாவம் அதிகமாகின்றன. எவரது பாவம் அதிகமாகின்றதோ அவரது இதயம் மாணித்து விடுகிறது. எவரது இதயம் மாணித்து விடுகிற தோ அவர் நரகை அடைவார் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

ஒரு நகரத்திலே நபிமார்களைப் போன்று அமல் செய்து கொண்டிருந்த 18000 தவசீலர் (ஆபிதீன்) கள் இருந்தார்கள். ஆயினும் அவர்களையும், அந்நகர வாசிகளை யும் அழித்து நாசமாக்கும்படி இறைவன் மலக்குகளுக்கு உத்திரவிட்டான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சமயம் கூறிய போது அங்கு குழுமியிருந்த ஸஹா பாக்கள் ஏன் அவ்வாறு உத்திரவிட்டான் என்று

கேட்டார்கள். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஆபிதீன்கள் நல்ல விஷயங்களைப் பிறருக்குச் சொல்லாமலும், தீய காரியங்களை விட்டும் தடுக்காமலும் இருந்தார்கள். அதனால் தான் இறைவன் அவ்வாறு ஆக்ஞையிட்டான் என்று கூறினார்கள். (துர்ரத்துல்வாயிஜீன்)

எட்டு சொர்க்கமும், ஏழு நரகமும் யார்? யாருக்கு?

இறைவன் மானிட வர்க்கத்தை எல்லா சிருஷ்டிகளைக் காணவும் சீரிய முறையில் சிருஷ்டித்து அந்த சீரிய தன்மை சீர்பெற்று இருக்க வேண்டும் என்பதற்காக பகுத்தறிவையும் கொடுத்தருளியுள்ளான் அப்பகுத்தறிவின் மூலம் நன்மை தீமைகளை ஆய்ந்தறிந்து நன்மைகளைக் கடைபிடித்து நடப்பவர்களுக்கு சொர்க்கத்தையும், தீமைகளைக் கடைபிடிப்பவர்களுக்கு நரகத்தையும் கொடுப்பதாகக் கூறியுள்ளான். அவைகள் சுருக்கமாகக் கீழே வரையப்படுகின்றன.

எட்டு சொர்க்கங்கள் யார்? யாருக்கு?

1. "தாருல்ஜலால்" என்னும் சொர்க்கம், அதில் நபிமார்கள், ரசூல்மார்கள், ஷுஹதாக்கள், கொடையாளிகள் புகுதுவார்கள். 2. "தாருஸ்ஸலாம்" என்னும் சொர்க்கம், அதில் சம்பூரணமாக ஒளுச் செய்து பய பக்தியோடு தொழுதவர்கள் புகுதுவார்கள். 3. "ஜன்னத்துல்மஃவா" என்னும் சொர்க்கம், அதில் ஜக்காத் கொடுத்

தவர்கள் புகுதுவார்கள். 4. "ஜன்னத்துல்குல்து" என்னும் சொர்க்கம். அதில் நன்மைகளை ஏவி, தீமைகளைத் தடுக்கும் புனித வேலையிலே ஈடுபட்டவர்கள் புகுதுவார்கள். 5. "ஜன்னத்துன்னயீம்" என்னும் சொர்க்கம் அதில் தமது மனோ இச்சைகளை அடக்கி, ஒடுக்கி, நேர்மையைக் கடைபிடித்து நடந்தவர்கள் புகுதுவார்கள். 6. "தாருல்கரார்" என்றும் சொர்க்கம், அதில் ஹஜ்ஜு" உம்ரு செய்தவர்கள் புகுதுவார்கள் 7. "ஜன்னத்துல் பிர்தவ்ஸ்" என்னும் சொர்க்கம். அதில் முஜாஹிதீன்கள் (அறப்போர் வீரர்கள்) புகுதுவார்கள். 8. "ஜன்னத் துல்அத்னு" என்னும் சொர்க்கம், அதில் விலக்கானவைகளை அனுபவிக்காமலும், பாராமலும், தொடாமலும் தம்மைப் பாதுகாத்து, பெற்றோருக்கு வழிப்பட்டு நடந்தும் பந்துக்களை சேர்த்து வாழ்ந்தும் மற்றும் எல்லா நற்கிரியைகளையும் செய்தவர்கள் புகுதுவார்கள்.

ஏழு நரகங்கள் யார்? யாருக்கு?

1. "ஜஹன்னம்" என்னும் நரகம், அதில் உம்மத்தே முஹம்மதிய்யா, முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தோரில் உள்ள பெரும் பாவிகள் புகுதுவார்கள். 2. "லழா" என்னும் நரகம், அதில் முஷ்ரிக்கீன்கள் புகுதுவார்கள். 3. "சக்கர்" என்னும் நரகம், அதில் யூதர்களும், நஸாராக்களும் புகுதுவார்கள். 4. "ஹுதமா" என்னும் நரகம், அதில் மஜூஸி (நெருப்பை வணங்குகிறவர்கள்) புகுதுவார்கள். 5. "ஜஹீம்" என்னும் நரகம், அதில் விக்ரக ஆராதனைக்காரர்கள் புகுது

வார்கள். 6. "சஈர்" என்னும் நரகம், அதில் எஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தார்கள் புகுதுவார்கள். 7. "ஹாவியா" என்னும் நரகம், அதில் ஜின்னுகளும் ஷைத்தான்களும் புகுதுவார்கள். மற்றும் அல்லாஹ், ரசூலையும், திருமறையையும் பொய்யாக்கி வைப்பவர்களும் மற்றும் மனோ இச்சைப்படியெல்லாம் நடப்பவர்களும் புகுதுவார்கள். (துர்ரதுல்வாயிஜீன்)

பிரார்த்தனை ஏற்கப்படும் நாட்களும், இரவுகளும், இடங்களும்.

1. ரமளான் மாதம் 27-ம் இரவு (லைலத்துல்கத்ரி) 2. முஹர்ரம் மாதம் ஒன்பதாம் நாள். 3. பிரதி வெள்ளிக்கிழமை தோறும். 4. நடுநிசி, முன்னிரவு, பின்னிரவின் இறுதி. 5. சஹர், நோன்பு நோற்கும் நேரம் 6. ஐவேளைக்கும் பாங்கு சொன்ன பின். 7. பாங்கு இக்காமத்திற்கிடையில். 8. பாங்கில் ஹய்ய அலஸ்ஸலாத், ஹய்ய அலல்பலாஹ் என்று சொல்லும் நேரத்தில். 9. போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கும் சமயம். 10. ஐவேளையும் பர்லு தொழுகைக்குப் பின்னுல. 11. சஜ்தா செய்யும் சமயம் 12. குர்ஆன் ஷரீபை பூராவும் ஓதி முடித்தபின். 13. ஜம்ஜம் தண்ணீரைக் குடிக்கும் சமயம். 14. மையித்தின் அருகே இருக்கும் சமயம். 15. அதிகாலை கோழி கூவும் சமயம். 16. முஸ்லிம்கள் எல்லோரும் ஒன்று கூடும் சமயம். 17. இமாம் வலழ்ழால்லீன் என்று ஓதும் சமயம் 18. ஒருவர் மரணமாகும் போது அவரின்

கண்களைக் கசக்கி மூடும் சமயம். 19. மழை பெய்யும் சமயம். 20. கஃபத்துல்லாஹ்வை 'தவாப்' செய்யும் சமயம். 21. சூரத்துல் "அன்ஆம்" என்னும் அத்தியாயத்தை ஓதும்போது அல்லாஹ் என்று வரும் இரண்டு இடத்திற்கும் இடையில். 22. கஃபாவில் 'முல்தஜிம்' என்னும் இடத்தில். 23. 'ஜம்ஜம்' கிணற்றின் அருகில் 24. ஸபா, மர்வா குன்றுகளின் மீது. 25. மீஜாபே ரஹ்மத்திற்குக் கீழ். 26. ஸபா, மர்வாவிற்கு இடையில் தொங்கோட்டம் ஓட வேண்டிய இடத்தில். 27. கஃபாவில் மகாமே இப்ருஹீம் என்னும் இடத்தில் 28. அரபாத் மைதானத்தில்; 29. முஸ்தலிபா, என்னும் இடத்தில், 30. மினாவில் கல்லெறியும் மூன்று இடங்களில் 31. திருநபியின் ரவ்ளாவிற்கு அருகில் 32. கஃபத்துல்லாஹ்வின் உள்ளே. 33. துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பதாம் நாள். 34. முஹர்ரம் மாதம் பத்தாம நாள். 35. ரஜப் மாதம் இருபத்தி ஏழாம் நாள், இரவு 36. பத்ரு யுத்தம் நடந்த ரமளான் மாதம் 17-ம் நாள் 37. ஷஃபான் மாதம் பதினைந்தாம் இரவு, (பராஅத் இரவு) 38. இரு பெருநாட்களின் இரவு. 39. துல்ஹஜ்ஜு மாதம் முதல் பத்து இரவுகள். 40. அய்யாமுத்தஷ்ரீக், துல்ஹஜ்ஜு மாதம் 10, 11, 12 ஆகிய மூன்று நாட்கள்

(பளாயிலேதுஆ)

பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவோர்.

கீழ்க் காண்போரின் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் என்று ஹதீதிலே கூறப்பட்டுள்ளது.

1. அல்லல்பட்டு, அவதியுறும் நிலைமையுடையவர் 2. அநீதத்திற்குள்ளாக்கப்பட்டவர். 3. பிள்ளைகளுக்காகப் பெற்றோர்களின் பிரார்த்தனை. 4. நீதியும், நேர்மையும் உடைய அரசன். 5. பரிசுத்தவான்களான (ஸாலிஹீன்கள்) நல்லோர்கள். 6. சொல்லாலும், செயலாலும் பெற்றோருக்குப் பணிவிடை செய்யும் பிள்ளைகள். 7. ஊர் விட்டு ஊர் செல்லும் பிரயாணிகள் 8. நோன்பு திறக்கும்போது நோன்பாளிகளின் பிரார்த்தனை. 9. ஒரு முஸ்லிம், மறைவாக இருக்கும் ஒரு முஸ்லிமுக்கு செய்யும் பிரார்த்தனை 10. அக்கிரமத்தை நாடாமலும், மித்திர துரோகம் செய்யாமலும், நான் பிரார்த்தனை செய்தேன் அதை இறைவன் ஏற்கவில்லை என்று சொல்லாமலுமிருப்பவர். 11. ஹாஜிகள் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பி வந்து வீடு புகுமுன் செய்யும் பிரார்த்தனை 12. தஹஜ்ஜுத் நேரத்தில் தொழுது பிரார்த்தனை செய்கிறவர். (பளாயிலேதுஆ)

பிஸ்மில்லாஹ்வின் அற்புத சக்தி!

1. எவர் தமது ஒவ்வொரு செய்கையின் ஆரம்பத்திலும் "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று கூறி ஆரம்பிக்கிறாரோ அவர் இருலகிலும் நல்லவராவார். 2. பிஸ்மில்லாஹ் சொல்லி ஆரம்பிக்காத ஒவ்வொரு காரியமும் அல்லாஹ்வின் அருளை விட்டும் தூரமானதாகும். 3. பிஸ்மில்லாஹ் முதன் முதலில் இறக்கியருளப்பட்ட சமயம் அதன் பயங்கரத்தால் மலைகளெல்லாம் நடுநடுங்கி ஆட்டங் கொடுத்து விட்டன.

4. எவர் தனது வழக்கத்தில் அதிகமாக பிஸ்மில்லாஹ் சொல்லுவதைக் கடைபிடிக்கிறாரோ அவர் நரகில் பிரவே சிக்கமாட்டார். 5. எவர் அதிகமாக பிஸ்மில்லாஹ்வை ஓதுகிறாரோ அவர் வானவர்களிடமும், ஜனங்களிடமும் கண்ணியமானவராகவும், கம்பீரமானவராகவும் ஆகிவிடு கிறார். 6. பிஸ்மில்லாஹ் சொன்ன காரணத்தாலேயே இறைவன் ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களின் தவ்பாவை ஏற்றுக் கொண்டான் 7. பிஸ்மில்லாஹ்வைச் சொன்ன காரணத்தினாலேயே ஹஜ்ரத்நூஹ் (அலை) அவர்களின் கப்பல் ஜூதி என்னும் மலையை அடைந்து ஈடேற்றமடைந் தது. 8. பிஸ்மில்லாஹ்வைச் சொன்ன காரணத்தினா லேயே ஹஜ்ரத் இப்ராஹிம் (அலை) அவர்களின் நெருப்பு குளிர்ச்சி அடைந்தது. 9. பிஸ்மில்லாஹ்வைச் சொன்ன காரணத்தாலேயே ஹஜ்ரத் மூசா (அலை) அவர் கள் பிர்அவ்னை விட்டும் அவனின் சேனையை விட்டும் ஈடேற்றமடைந்தார்கள். 10. பிஸ்மில்லாஹ் சொன்ன தினால்தான் ஹஜ்ரத் சுலைமான் (அலை) அவர்களின் அரசாங்கத்தை இறைவன் பலப்படுத்தி, மனு, ஜின்னுகளை யும், பறவையினங்களையும் அவர்களுக்கு வழிப்படச் செய் தான். 11. பிஸ்மில்லாஹ்வின் காரணத்தால் தான் ஹஜ்ரத் ஈசா (அலை) அவர்கள் மரணித்தோரை உயிர் பெற்று எழச் செய்தார்கள். 12. பிஸ்மில்லாஹ்வின் காரணத்தால்தான் நமது நபிகள் பெருமானார் (ஸல்) அவர் கள் மாபெரும் வெற்றி பெற்றார்கள். 13. ஒருவர் எந்த நோக்கத்திற்காக பிஸ்மில்லாஹ் ஓதுகிறாரோ அவர் அந்த நோக்கத்தை அடைவார். 14. எவர் இரவில் தூங்குவதற்கு முன் பிஸ்மில்லாஹ்வை பதினொரு தடவை

ஓதிக் கொண்டு தூங்குகிறரோ அவர் ஷைத்தான். திருட னுடைய தீங்கை விட்டும், திடீர் மரணத்தை விட்டும் பாது காக்கப்படுவார். 15 ஒருவர் 50 தடவை பிஸ்மில்லாஹ் வை ஓதிக் கொண்டு ஏதேனும் ஒரு அக்கிரமக்கார னிடமோ அல்லது கல்நெஞ்சம் படைத்த கஞ்சனிடமோ செல்வாரானல் அவர்களின் மனதை இறைவன் மாற்றி விடுவான். 16. எதாவது ஒரு வேதனைக்கு மூன்று நாள் தொடர்பாக பிஸ்மில்லாஹ்வை நூறு, நூறு தடவை ஓதி ஊதி வந்தால் அவ்வேதனை நீங்கும். 17. எவர் பிஸ்மில்லாஹ் சொல்லி வீட்டினுள் புகுதுகிறரோ, அல்லது உணவு உண்கிறரோ, அல்லது தண்ணீர் குடிக்கிறரோ அல்லது நித்திரை செய்கிறரோ அவைகளில் ஷைத்தான் சம்மந்தப்படமாட்டான் பிஸ்மில்லாஹ் சொல்லவில்லை யானல் அவைகளில் ஷைத்தானும் கூட்டாகிக்கொள்கிறன். 18. எவர் பிஸ்மில்லாஹில்லதீ, லாஎளுர்ரு, மஅஸ்மி ஹீஷைஉன் பில்அர்ளி, வலாபிஸ்ஸமாயி, யா ஹய்யு, யாகையூம் என்று கூறி சாப்பிடுகிறரோ அவருக்கு அந்த ஆகாரம் எவ்விதத் தீங்கும் செய்யாது, அதில் நஞ்சு கலந் திருந்தாலும் சரியே. 19. ஏதேனும் கஷ்டத்தில் சிக்கிய ஒருவர் வெள்ளிக்கிழமை அஸருக்குப் பின் ஒளுச் செய்து உள்ளச்சத்தோடு யாஅல்லாஹு, யா ரஹ்மானு, யாரஹீமு என்று சூரியன் மறையும்வரை ஓதி அல்லாஹ் விடத்தில் கெஞ்சி அழுது துஆ செய்வாரானல் அல்லாஹ் அவரின் கஷ்டத்தை நீக்குவான். 20. எவர் பிஸ்மில் லாஹிர் ரஹ்மானிர் ரஹீம், வலாஹவ்ல, வலாகுவ்வத்த, இல்லாபில்லாஹி, என்று பத்து முறை கூறுகிறரோ அவர் பாவத்தை விட்டும் பரிசுத்தமடைந்து விடுவதோடு, எழுபது

வியாதிகளை விட்டும் பாதுகாக்கப்படுகிறார். 21. எவர் பிஸ்மில்லாஹி, தவக்கல்து, அலல்லாஹி, வாஹவ்ல, வலாகுவ்வத்த என்று கூறி வீட்டை விட்டுக் கிளம்புகிறாரோ அவர் ஷைத்தானின் தீங்கை விட்டும் பாதுகாக்கப்படுவார். 22. பக்ர்பின் அப்துல்லாஹிமுஸ்னி அவாகள் கூறுகிறார்கள், நான் பெருமானாரிடம் சென்று, அல்லாஹ்வின் தூதரே! எனது பொருள் விருத்தியடைவதில்லையே நான் என்ன செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டேன். அப்போது பெருமானார் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஓதி வரச் சொன்னார்கள். அவ்விதமே ஓதி வந்தேன். சில தினங்களுக்குள் என் பொருள் பெருகி விட்டது.

பிஸ்மில்லாஹிஅலா, நப்சீ, வஅலா, அஹ்லீ வமாலீ, அல்லாஹும்ம ர்ளனீபிமா கழைத்த, வஆபினீபிமா, அப்கைத்த, ஹத்தா லா உஹிப்ப, தஃஜீல, மாஅக்கர்த்த, வலா தஃகீர, மாஅஜ்ஜல்த.

23. மது அருந்தும் போதோ, ஹறாமானவைகளைச் சாப்பிடும்போதோ. விபச்சாரம் செய்யும் போதோ ஒருவர் பிஸ்மில்லாஹ் சொல்வாரானால அவர் காபிராகி விடுவார் 24. பிஸ்மில்லாஹ்வின் சிறப்புகளைக் கேட்டு அங்கோர் சந்தோஷமடைகின்றனர். அதுவே போதுமெனக்கருதி, ஐவேளைத் தொழுகையையும் விட்டு விடுகின்றனர். ஹறாமான பொருள்களை உண்கிறார்கள். போதை வஸ்துகளை உபயோகிக்கிறார்கள. பெரும்பாவமான காரியங்களைச் செய்கிறார்கள். ஷிர்க், பித்அத்தான காரியங்களைச் செய்கிறார்கள். உண்மையில இறைவனின் திருநாமத்தி

சிறப்புக்கு அவர்களின் இதயங்களில் இடமிருந்தால் அவ்வாறு செய்வார்களா? எனவே எவர்கள் மார்க்க விதிகளைப் பேணி நடக்கின்றார்களோ அவர்கள் தான் பிஸ்மில் வாழ்வின் பலனை அடைய முடியும் என்பதை சிந்தனையில் இருத்திக் கொள்ள வேண்டும். (முன் தஹூல்மவாயிஜ்)

இப்படி ஒரு காலம் வரும் அந்தக் காலத்திலே !

ஏ! அலியே எனது உம்மத்தோருக்கு விரைவில் ஒரு காலம் வரும். அந்த காலத்திலே ஜனங்கள் இப்படி இருப்பார்கள் :-

1. ஜனங்கள் பெருமை, அகம்பாவம், ஆணவம் உள்ளவர்களாக இருப்பார்கள். 1. கல்வி கற்பதை வெறுத்து அறிவிலிகளாக இருப்பார்கள். 3. அநீதம் அக்கிரமம், அழிச்சாட்டியம் செய்வதையே விரும்புவார்கள 4. நல்லவைகளைக் கெட்டவைகளாகவும், கெட்டவைகளை நல்லவைகளாகவும் கருதுவார்கள். 5. முஸ்லிம்களை இழிவாகவும், காபிர்கள் சங்கைவான்களாகவும் இருப்பார்கள். 6. முஸ்லிம்களின் மத்தியில் ஒற்றுமை குன்றி வேற்றுமை வேரூன்றியிருக்கும். 7. பள்ளிவாசல்கள் நடைபாதைகளாகவும். தூங்கும் இடங்களாகவும், சர்ச்சை செய்யும் ஸ்தலங்களாகவும் இருக்கும். 8. ஜனங்கள் ஒன்றுக்கொன்று சண்டையும், சர்ச்சையும் செய்து கொண்டு சபித்துக் கொள்வார்கள். 9. கடமையான ஐ வேளைத் தொழுகையினையும் அலட்சியமாக விட்டு விடுவார்கள். 10. ஏழைகள் ஏளனமாகவும், இழிவாகவும் கருதப்படுவார்கள். 11. சிறுவர்களின் உள்ளங்களிலே

பெரியோர்கள் பற்றிய பயம் இராது. 12. பொறுமை அதிகமாகும், அதனால் ஒரு மகன் தன் தகப்பன் இறப்பதை ஆதரவு வைப்பான். 13. உண்மை குறைந்து விடும் பொய் அதிகமாகி விடும் 14. மது அருந்தும் பழக்கம் சர்வ சாதாரணமாகிவிடும். 15. வட்டி, இலஞ்சம் வாங்குவது சகஜமாகிவிடும். 16. ஆண்கள் நாணப்படுவார்கள், பெண்கள் நாணப்படமாட்டார்கள். 17. அக்கிரமக்காரனுக்கு உதவியும் ஒத்தாசையும் செய் வார்கள பாசிப்போரை விரட்டி விடுவார்கள். 18. மோசடி அதிகமாகும் நம்பிக்கை குறைந்துவிடும். 19. பாவமறியாப் பத்தினிப் பெண்கள் விபச்சாரப் பழி சுமத்தப்படுவார்கள். 20. தொழுகையின் நேரங் களில் பள்ளிகள் பூட்டப்படும். 21. ஒரு தாசி தன் மகளைச் சிங்காரிப்பது போன்று ஒரு தாய் தன் மகளைச் சிங்காரிப்பாள். 22. அந்தக்காலத்தில் வான் பொழி யாது, பூமி முளையாது. 23. சிறியோர் பெரியோரைக் கண்ணியப்படுத்தமாட்டார்கள். பெரியோர்கள் சிறியோர் மீது இரக்கங் கொள்ளமாட்டார்கள். நல்லொழுக்க சீலர் கள் இழிவாகக் கருதப்படுவார்கள். அந்தக் காலத்திலே ஒரு வியாபாரி தன் வியாபாரத்தின் மூலமும், ஒரு விவசாயி தன் விவசாயத்தின் மூலமும், ஒரு செல்வந்தர் தன் செல்வத்தின் மூலமும் சந்தோஷமடையமாட்டார்கள். 24. எங்கும் குழப்பமும், புரட்சியும் பரவி நிற்கும். அதனால் என்ன நிகழுமோ என்ற பயத்தால் எவருக்கும் மன ஒர்மை இராது. 25. தற்கம் புரிவதற்கும், திறமை யைக் காட்டுவதற்குமே கல்வி கற்பார்கள். 26. முஃமின் களின் உள்ளங்களிலே ஈமான் அகன்று காணப்படும்.

27. விபச்சாரம் செய்து விட்டு அதைப் பிறரிடம் பெருமையாகக் கூறுவார்கள். **28.** உண்மையைச் சொல்கிறவர்கள் கோபத்திற்குள்ளாவார்கள், **29.** குர்ஆன் ஷரீபை சங்கீதம் பாடுவது போன்று இராகமாக ஓதுவார்கள் அதனால் குர்ஆன்ஷரீப் இறைவனின் வாக்கியம் என்பது அவர்களின் உள்ளத்தை விட்டும் நீங்கி விடும். **30.** எ! அலியே! எனது இந்த உபதேசத்திலே உலகம் முடியும் வரை நிகழப்போகும் சம்பவங்கள் அடங்கியிருக்கின்றன. ஆதலால் நீர் இதை நன்கு மனனம் செய்து மற்றவருக்கும் அறிவித்து விடுவீராக என்று பெருமானார் நவின்றுள்ளார்கள். (வஸிய்யத்துன்னபீ)

நன்றி கெட்டால் நாசமே விளையும்.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் :-

பனீஇஸ்ராயீல்களில் ஒரு குஷ்டரோகி, ஒரு வழுக்கத்தலையன், ஒரு குருடன் ஆகிய மூவர் இருந்தார்கள். அவர்களை இறைவன் சோதிக்க நாடி அவர்களிடம் ஒரு மலக்கை அனுப்பி வைத்தான். அந்த மலக்கு முதலில் குஷ்டரோகியிடம் வந்து, உனது விருப்பம் என்ன? எது தேவை என்று கேட்டார். அதற்கவர் எனது இந்த வியாதியின் காரணத்தால் ஜனங்களெல்லாம் என்னை வெறுக்கிறார்கள். கிட்ட நெருங்க விடுகிறார்களில்லை. ஆதலால் என் வியாதி நீங்கி என் மேனி நன்றாக வேண்டும் என்பதே என் விருப்பம் என்றார். உடனே அந்த மலக்கு அம்மனிதனின் மேனியைத் தடவினார். அதே நேரத்தில்

அவரின் மேனியெல்லாம் அழகுள்ளதாகி விட்டது. பின்பு உனக்கு எந்தப் பொருள் மீது விருப்பம் என்று கேட்டார். அதற்கவர் ஒட்டகத்தின் மீதுதான் விருப்பம் என்றார். அதற்கேற்ப ஒரு சினை ஒட்டகையைக் கொடுத்து அல்லாஹ் இதில் பரக்கத் செய்வானாக எனக் கூறி பின்பு வழுக்கத்தலையனிடம் வந்து உனது விருப்பம் என்ன? என்று கேட்டார். அதற்கவர் என் தலையில் உரோமம் முளைக்க வேண்டும் அதுவே எனக்கு விருப்பம் என்றார் உடனே அந்த மலக்கு அம்மனிதனின் தலையைத் தடவினார். அதே நேரத்தில் தலையில் முடி முளைத்து நன்றாகி விட்டது. பின்பு உனக்கு எந்த பொருளின் மீது ஆசை? என்று கேட்டார். அதற்கவர் எனக்கு பசுவின் மீது விருப்பம் என்றார். அதன்படி ஒரு சினைபசுவைக் கொடுத்து அல்லாஹ் இதில் பரக்கத் செய்வானாக என்று கூறிச் சென்றார்.

அதன் பின் குருடனிடம் வந்து நீர் என்ன விரும்புகிறீர்? உமது தேவையென்ன? என்று கேட்டார். அதற்கவர் இறைவன் என் கண்களை நன்றாக்க வேண்டும். நான் எல்லோரையும் பார்க்க வேண்டும் இதுவே எனது ஆசை என்றார். அதன்படி அம்மலக்கு அம்மனிதனின் கண்களைத் தடவினார். உடனே கண் தெரிந்தது. பின்பு உனக்கு எந்தப் பொருளின் மீது விருப்பம்? என்று கேட்டார். அதற்கவர் எனக்கு ஆட்டின் மீதுதான் விருப்பம் என்றார். அதற்கேற்ப ஒரு சினை ஆட்டைக் கொடுத்து அல்லாஹ் இதில் பரக்கத் செய்வானாக என்று கூறிச் சென்று விட்டார். இம்மூவரின் ஒட்டகம், பசு, ஆடுகள் குட்டிகள் ஈன்று பெருகி விட்டன.

பின்பு இறைவனின் உத்திரவுப்படி அந்த மலக்கு முன் வந்த ரூபத்தில் அந்த குஷ்டரோகியிடம் வந்து நான ஒரு பரதேசி, பிரயாணத்திற்குரிய சாமான்களெல்லாம் முடிவடைந்து விட்டன. நான் என் ஊர் செல்வதற்கு அல்லாஹ்வையும், உன்னையும் தவிர வேறு வழியில்லை. ஆதலால் உனக்கு அழகிய மேனியையும், நிறத்தையும் கொடுத்த இறைவனின் பேரால் உன்னிடத்தில் ஒரு ஒட்டகம் கேள்க்கிறேன். கொடுப்பீரானால் அதன் மீது ஏறி என் ஊர் செல்ல வசதியாகும் என்று கேட்டார். அப்போது அம்மனிதன் எனக்கு வேறு பல கடமைகளிருக்கின்றன. ஆதலால் உமக்குக் கொடுக்க வசதியில்லை நீர் சென்று விடும் என்றுரைத்தான். அப்போது அம்மலக்கு ஏ! மனிதனே! உன்னை நான் அறிவேன். நீ குஷ்டரோகியாக இருக்கவில்லையா? அதனால் ஜனங்களெல்லாம் உன்னை வெறுக்கவில்லையா? நீ யாது மற்ற ஏழையாக இருந்தபோது இறைவன் உனக்கு இவ்வளவு பாக்கியங்களையும் கொடுக்கவில்லையா? என்று எடுத்துக் கூறினார். அதற்கவன் ஓஹோ! அப்படியா சொல்கிறீர்? இந்தப் பொருள்களெல்லாம் தலைமுறை தலைமுறையாக என் மூதாதைகள் மூலம் கிடைத்தவைகள் என்றான்: அதற்கு அந்த மலக்கு நீ பொய்யனாக இருந்தால் இறைவன் உன்னைப் பழையபடி ஆக்குவானாக என்று கூறினார். பின்பு வழுக்கைத் தலையனிடம் வந்து, குஷ்டரோகியிடம் கேட்டது போலவே கேட்டார். அதற்கவனும் குஷ்டரோகி போலவே பதில் சொன்னான். அப்போது அந்த மலக்கு நீ பொய்யனாக இருந்தால் இறைவன் உன்னை முன் போலவே ஆக்குவானாக என்று கூறினார்.

பின்பு குருடனிடம் வந்து, நானொரு வழிப்போக்கன் பிரயாணச் சாமான்கள் எல்லாம் முடிந்து விட்டன. என் ஊர் செல்வதற்கு அல்லாஹ்வையும் உன்னையும் தவிர வேறு வழியில்லை. ஆதலால் எந்த இறைவன் உனக்கு மறுமுறையும் கண்ணுக்குப் பார்வையைக் கொடுத்தானோ அந்த இறைவன் பேரால் ஒரு ஆடு கேட்கிறேன். நீர் கொடுப்பீரானால் அதன் மூலம் நான் என் ஊர் செல்ல வழி ஏற்படும் என்று கேட்டார். அப்போது அம்மனிதன் ஆம் நான் குருடனாக இருந்தேன். இறைவன் எனக்குப் பார்வையைக் கொடுத்து இவ்வளவு பாக்கியத்தையும் அளித்தான் ஆதலால் உமது மனம் விரும்பும் அளவு எடுத்துக் கொள்வீராக. இறைவன் மீது ஆணையாக நான் உம்மைத் தடுக்க மாட்டேன் என்றுரைத்தான். அந்த மலக்கு உமது பொருளை நீரே வைத்துக் கொள்ளும் எனக்குத் தேவையில்லை. இறைவன் உங்கள் மூவரையும் சோதிக்க நாடினான். சோதனை முடிந்துவிட்டது என்று கூறிச் சென்று விட்டார். குறிப்பு:— முந்திய இருவரும் இறைவன் அளித்த பாக்கியங்களுக்கு நன்றி செய்யாததால் நாசமடைந்து பழைய நிலையை அடைந்தார்கள். இறைவனின் அதிருப்திக்கும் ஆளானார்கள். மூன்றும் மனிதன் நன்றி மறவாததால் அவனின் பொருள்கள் நிலைத்தன. இறைவனின் திருப்தியும் கிடைத்தது. நன்றி கெட்டால் நாசமே விளையும் என்பதை இச்சம்பவம் துலக்குகிறதல்லவா?

(பிஹ்ஷ்த்ஜேவர்)

தவ்ராத் வேதத்திலே!

1. இம்மையில், மறுமைக்குரிய சாதனங்களைத்

தப்பளித்துக் கொண்டவர் அல்லாஹ்வின் அத்தியந்த நண்பராவார். 2. கோபத்தை விட்டொழித்தவர் அல்லாஹ்வின் அண்மையில் இருப்பார். 3. இகவாழ்வின் இன்பங்களை விட்டொழித்தவர் பரலோகத்தில் பற்பல இன்பங்களை அடைவார். 4: பொறுமையை விட்டொழித்தவர் மக்களின் புகழைப் பெறுவார். 5. பதவி மோகத்தை விட்டொழித்தவர் இறைவனிடத்தில் கௌரவிக்கப்படுவார் 6. இம்மையில் பொருள் சேமிப்பதை விட்டொழித்தவர் மறுமையில் நல்லோர் குழுவில் நலமுடனிருப்பார். 7. இம்மையில் சண்டை சச்சரவுகளை விட்டொழித்தவர் மறுமையில் வெற்றி பெறுவார். 8. கஞ்சத்தனத்தைக் களைந்தவர் எல்லா சிருஷ்டிகளிடமும் ஞாபிக்கப்படுவார், புகழப்படுவார். 9. இம்மையில் துன்புறுகிறவர் மறுமையில் இன்புறுவார். 10. இம்மையில் தகாத செயல்களையெல்லாம் விட்டொழித்தவர் மறுமையில் நபிமார்களுடனிருப்பார். 11. இம்மையில் தகாத பார்வையை விட்டவரின் கண்களை மறுமையில் இறைவன் சொர்க்கத்தில் சுகண்டியாக்கி வைப்பான். 12. இம்மையில் எளிமையைக் கடைபிடித்தவர் மறுமையில் நபிமார்களுடனும், அவ்லியாக்களுடனும் இருப்பார். 13. பிறரின் தேவைகளை நிறைவேற்றும் பணியிலே, ஈடுபட்டிருப்பவரின் தேவைகளை இறைவன் இம்மையிலும், மறுமையிலும் நிறைவேற்றி வைப்பான். 14. எவர் தனது கப்ரில் தனக்கு சாதகமாக இருக்கும் சாதனங்களை விரும்புகிறாரோ அவர் நடுநிசியில் விழித்தெழுந்து தொழுது கொள்ளட்டும் 15. எவர் மறுமையில் இறைவனின் அர்ஷின் நிழலிலிருக்க விரும்புகிறாரோ அவர் உலகப்பற்றை உதறித் தள்ளட்டும்.

16. எவர் தனது கேள்வி கணக்கு இலகுவாக இருக்க வேண்டும் என்று விரும்புகிருரோ அவர் தன் ஆன்மாவிற்கும், பிறருக்கும் நல்லுபதேசம் புரிந்து கொள்ளட்டும் 17. எவர் தம்மை மலக்குகள் தரிசிக்க வேண்டுமென்று விரும்புகிருரோ அவர் விலக்கானவைகளை விட்டும் பேறுதலாக இருந்து கொள்ளட்டும். 18. எவர் சொர்க்கத்தின் நடுவிலே இருக்க விரும்புகிருரோ அவர் இரவிலும், பகலிலும் இறைவனைத் தியானம் செய்து கொள்ளட்டும். 19. எவர் அல்லாஹ்விடம் அறிஞகை இருக்க விரும்புகிருரோ அவர் பக்தி உள்ளவராக இருந்து கொள்ளட்டும். 20. எவர் நரகை விட்டும் சாந்தி அடைய விரும்புகிருரோ அவர் எவரையும் நலவைக் கொண்டல்லாது நினைக்கட்டும். 21. எவர் இகபர மிரண்டிலும் இன்புற்று, சீர்பெற்று இருக்க விரும்புகிருரோ அவர் இம்மையைக் காண மறுமையை தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். 22. எவர் "பிர்தவ்ஸ்" என்னும் சொர்க்கத்தின் சுவண்டியை அடைய வேண்டுமென்று ஆவற்படுகிருரோ அவர் தனது ஆயுள் காலத்தை அனுவசியக் காரியங்களில் பாழாக்காதிருக்கட்டும். 23. எவர் தனது இதயம் பிரகாசமுள்ளதாக ஆக வேண்டுமென்று எண்ணுகிருரோ அவர் சிருஷ்டிப் பொருள்களைச் சிந்தனை செய்து மெய் உணர்வு பெறட்டும். 24. எவர் சகிப்புத் தன்மையுள்ள சரீரத்தையும், தியானமுள்ள நாவையும், பக்தி உடைய உள்ளத்தையும் விரும்புகிருரோ அவர் அதிகமாகப் பிழை பொறுக்கத் தேடிக் கொள்ளட்டும். 25. எவர் சொர்க்கத்தின் நடுவிலிருக்க விரும்புகிருரோ அவர் அனுதினமும் கலப்பற்ற முறையில் தவ்பா செய்து கொள்ளட்டும் என்று துவராத வேதத்திலே கூறப்பட்டுள்ளது. (முனப்பஹாத்.)

பற்பல பாவிகளுக்கு பலவிதமான வேதனைகள்.

1. ஜக்காத், ஸதக்கா கொடாதவர்கள்மீது இறைவனின் கோபம் உண்டாகிறது. 2. ஜககாத் கொடாதவர்கள் முதன் முதலில் நரகத்தில் புகுதுவார்கள், 3. ஜக்காத் கொடாதவர்களின் தொழுகை அங்கீகரிக்கப் படமாட்டாது. 4. ஜக்காத் கொடுப்பதை மறுப்பவர் நரகில் வெந்துருகுவார். 5. எவரின் பொருளிலே ஜக்காத்தின் தொகை சேர்ந்திருக்கிறதோ அவரின் அந்த பொருள் நாசமடையும். 6. ஜக்காத் கொடாதவர்கள் முஷ்ரிக்காவார்கள். 7. விபச்சாரம் பெருகினுல் காலரா உண்டாவது போல் ஜக்காத் கொடாததால் பஞ்சம் உண்டாகிறது. 8. ஜக்காத் கொடாதவரின் பொருள் சுத்தமடைவதில்லை. 9. ஜக்காத் கொடுப்பவரின் பொருள் பரிசுத்தமடைகிறது. 10. பொய்புகன்று, பொய் சத்தியம் செய்து வியாபாரம் செய்கிறவரின் வாயில் மறுமையில் கனல் பறக்கும் இரத்தம் வடியும் 11. பொய் சத்தியம் செய்வோரின் நாவை இழுத்துக்கட்டி தொங்க விடப்படுவார்கள். அவர்களின் கழுத்துகளில் பாம்புகள் பிடிங்கிக் கொண்டிருக்கும். 12. திருடர்களின் ஒவ்வொரு அங்கமும் துண்டிக்கப்படும் மறுபடியும் ஒன்று சேர்க்கப்பட்டு பின்பும் துண்டிக்கப்படும். 13. கோள சொல்வோரின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றப் படும் 14. எவர்பிறரின் நிலத்திலிருந்து அக்கிரமமாக ஒரு அங்குலப் பூமியையாயினும் அபகரித்துக் கொள்கிருரோ அவரின் கழுத்திலே அந்தப் பூமி வளையமாகப் போடப்படும்

15. இரு மனைவி உடையவர் அவ்விருவருக்குமிடையில் நீதமாக நடந்து கொள்ளவில்லையானால் அவர் தனது ஒரு தோள்புஜம் இறங்கியவராக எழுப்பப்படுவார். 16. எவர் குர்ஆன் ஷரீபுக்கு தன் விருப்பப்படி வியாக்கியானம் செய்கிறாரோ அவரின் வாய்க்கு நெருப்புக் கடிவாளம் போடப்படும். 17. எவர் பாலிலே தண்ணீர் கலக்குகிறாரோ அவரை அந்தப் பாலை விட்டும் தண்ணீரை நீக்கும்படி துன்புறுத்தப்படும். 18. எவர் கிப்லாவின் பக்கம் எச்சல் துப்புகிறாரோ அவரின் அந்த எச்சல் அவரின் முகத்திலேயே விழும். 19. எவர் தேவைக்கு அதிகமாக வீடு கட்டுகிறாரோ அந்த வீட்டைத் தன் முதுகின் மீது தூக்கிச் சுமக்கும்படி அவர் கஷ்டப்படுத்தப்படுவார் 20. எவர் உண்மைச் சட்டங்களை மறைத்து வைக்கிறாரோ அவருக்கு நெருப்புக் கடிவாளம் போடப்படும். 21. அனாதைகளின் சொத்துக்களை அனுபவிப்பவரின் வாய், மூக்கு, காது, கண்களில் புகை வெளிப்படும். அதைப் பார்த்து மற்றவர்கள் இவர்கள் அனாதைகளின் சொத்துக்களை உண்டவர்கள் என்று அறிந்து கொள்வார்கள். 22. எவர் அமானதப் பொருள்களில் சதிமோசம் செய்கிறாரோ அவரிடம் அந்தப் பொருளை திருப்பிக் கொடுக்கும்படி கூறப்படும். அதற்கவர் அப்பொருள்களெல்லாம் உலகிலேயே நின்று விட்டன என்று கூறுவார். அப்போது அவரை நரகத்திற்கு அழைத்துப் போகும்படி மலக்குகளுக்கு உத்திரவிடப்படும். 23. எவர்கள் இறைவனை பயப்படாமல் ஜனங்களைப்பயந்து மறைமுகமாக பாவமான காரியங்களில் ஈடுபடுகிறார்களோ அவர்களின் மேனியெல்லாம் மறுமையில் துர்நாற்றம் உள்ளதாக ஆகிவிடும். 34. குடிகாரர்கள்

மட்டின் பற்கள் போன்று பற்கள் உடையவர்களாக எழுப்பப்படுவார்கள். 25. பொறாமைக்காரர்கள் குளவியின் ரூபத்தில் எழுப்பப்படுவார்கள். 26 வட்டியின் பொருளை உண்பவர் மலை போன்று வயிறு பெருத்தவராக எழுப்பப்படுவார்கள். 27. எவர் உலகில் இரு நாவு உடையவராக இருந்தாரோ அவருக்கு மறுமையில் இரண்டு நெருப்பு நாவுகள் அமைக்கப்படும். (முனதஹறல்மவாயிஜ)

நாயகம் நரகில் கண்ட நங்கையர்.

ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள் :-

ஒரு நாளன்று நானும் பாத்திமாவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகம் சென்றோம். அது சமயம் அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள் அதைக் கண்ணுற்ற பாத்திமா, கண் கலங்கி, கலக்கமுற்று அருமைத் தந்தையே! நீங்கள் அழுது கொண்டிருக்கக் காரணம் யாது? என வினவினார்கள். அப்போது பெருமானார் அவர்கள் அருமை மகளே! நான் மிஃராஜ் சென்றிருந்த இரவில் நரகில் வேதனைப்படும் பல நங்கையரைக் கண்டேன். அவர்கள் வேதனைப்படுவதற்குரிய காரணங்களையும் அறிவிக்கப்பட்டேன். அதனை நினைத்துதான் அழுது கொண்டிருக்கிறேன் என்றுரைத்தார்கள். அப்போது பாத்திமா அவர்கள் அருமைத் தந்தையே! அந்தப் பெண்கள் எவ்வாறு வேதனை செய்யப்படுகிறார்கள்! என்று கேட்க, கீழ் கண்டவாறு கூறினார்கள்.

ஒரு பெண் அவளின் கூந்தலைப்பிடித்து இழுத்துக் கட்டித் தலை கீழாகத் தொங்கவிடப்பட்டிருக்கிறாள்.

கீழே எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் சூட்டினால் அவ ளின் மூளை கொதித்து இழகி வடிந்து கொண்டிருக்கிறது இன்னொரு பெண், அவளின் நாக்கை வெளியே இழுத்து அதனால் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கிறாள். அவளின் இரு கைகளும் பின்புறமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அவளின் கொழுப்பு உருகி வாயின் வழியே வடிந்து கொண்டிருக்கிறது. மற்றொரு பெண் அவளின் இரண்டு மார்புகளும் முதுகின் பக்கம் இழுக்கப்பட்டு அதனால் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கிறாள். திருகுகள்ளியின் சாறு அவளின் வாயின் வழியே ஊற்றப்படுகிறது. இன்னொரு பெண் அவளின் இரு கைகளும், கால்களும் முன் நெற்றி ரோமத்தால் கட்டப்பட்டு தொங்கவிடப்பட்டிருக் கிறாள், பெரும், பெரும் பாம்புகளும், தேள்களும், கட்டு வெகாலிகளும் அவளைப் பிடுங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னொரு பெண் அவள் தன் சரீரத்தையே கடித்துத் தின்று கொண்டிருக்கிறாள். மற்றொரு பெண் அவளின் சரீரம் நெருப்புக் கத்தரியால் துண்டிக்கப்பட்டுக் கொண் டிருக்கிறது. இன்னொருவள் முகம் கன்னங்கரேரென்று கருத்திருக்கிறது. அவள் தன் குடலை உருவித் தின்று கொண்டிருக்கிறாள். இன்னுமொரு பெண் செவிடாகவும் குருடாகவும், ஊமையாகவும் நெருப்புப்பெட்டியில் போட் டுப்பூட்டப்பட்டிருக்கிறாள். அவளின் மூளை உருகி மூக்கின் வழியாக வடிந்து கொண்டிருக்கிறது. அவளின் மேனி யெல்லாம் கருங்குஷ்டம், வெண்குஷ்டத்தால் பொத்து வடிந்து துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பெண் அவளின் தலை பன்றியின் தலை போன்றும். உடல்

இலட்சோப லட்ச வேதனைகள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பெண் நாயின் ரூபத்திலிருக்கிறாள். அவளின் வாயின் வழியாகவும், முன் துவாரத்தின் வழியாகவும் பாம்புகளும், தேள்களும் உள்ளே நுழைந்து பின் துவாரத்தின் வழியாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன. மலக்குகள் நெருப்புச் சம்மட்டியால் அவளின் தலை மீது அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் கூறிமுடித்த மாத்திரத்திலே, பாத்திமா நாயகம் பதைபதைத்து, துடி துடித்து என் அருமைத் தந்தையே! என் இரு கண்களின் குளிர்ச்சியே! அந்தப் பெண்மணிகள் செய்த கொடிய குற்றங்கள் என்ன? என்பதை இந்த அடியாளுக்கும் அறிவிப்பீர்களானால் அக்குற்றங்களை விட்டும் நீங்கியிருக்க ஏதுவாகும். ஆகையால் அறிவிப்பீர்களாக என்று வேண்டினார்கள். அதன்படி பெருமானார் (ஸல்) அவர்கள் கீழே கண்டவாறு விளக்கிக் கூறினார்கள்.

என் அருமை மகளே! கூந்தலை இழுத்து தலை கீழாகக் கட்டி வேதனை செய்யப்படுகிறவள் தனது கூந்தலை அன்னிய ஆடவருக்கு முன் மறைக்காதவள். நாக்கை இழுத்துக்கட்டி வேதனை செய்யப்படுகிறவள் தன் கணவனை நாவால் திட்டித் துன்புறுத்தியவள் என்று கூறி அதற்கு விளக்கமாக, எவள் தன் கணவனை நாவால் துன்புறுத்துகிறாளோ, அவளின் நாக்கை மறுமையில் எழுபது முழ நீளம் வெளியே இழுத்து அவளின் கழுத்திலே சுற்றிக் கட்டப்படும். எவள் தனது கணவனைப் பார்த்து நான் உன்னிடம் ஒரு நன்மையும் கண்டதில்லை என்ப